அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை–600 001.

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நலத்துறை

# பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
# மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலன்

## கொள்கை விளக்கக் குறிப்பு
## 2022 – 2023

மானியக் கோரிக்கை எண். 9

**ஆர்.எஸ். ராஜகண்ணப்பன்**
பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர்

©
தமிழ்நாடு அரசு
2022

# பொருளடக்கம்


| வ. எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1. | முன்னுரை | 1 |
| 2. | இடஒதுக்கீடு | 6 |
| 3. | கல்வி | 15 |
| 4. | கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள் | 15 |
| 5. | கல்வி உதவித்தொகைத் திட்டங்கள் | 24 |
| 6. | இலவசக் கல்வி உதவித் தொகை | 32 |
| 7. | பட்டியலிடப்பட்ட ஒன்றிய அரசு கல்வி நிறுவனங்களில் பயிலும் மாணவ, மாணவியருக்கான கல்வி உதவித் தொகை திட்டம். | 40 |
| 8. | மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சார்ந்த கிராமப்புற பள்ளி மாணவியருக்கு ஊக்கத்தொகை வழங்குதல் | 42 |
| 9. | இலவச மிதிவண்டிகள் வழங்கும் திட்டம் | 44 |
| 10. | விடுதிகள் | 45 |
| 11. | அரசால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் விடுதிகளுக்கு உணவு மானியம் | 57 |

| | | |
|---|---|---|
| 12. | விடுதிகளுக்கு பரிசுகள் வழங்குதல் | 58 |
| 13. | விடுதிகளுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டுதல் | 61 |
| 14. | விடுதி கட்டடங்கள் பராமரிப்பு | 62 |
| 15. | சீருடைகள் வழங்குதல் | 63 |
| 16. | பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள் | 65 |
| 17. | இலவச வீட்டு மனை வழங்குதல் | 67 |
| 18. | சீர்மரபினர் நல வாரியம் | 68 |
| 19. | தமிழ்நாடு நரிக்குறவர் நல வாரியம் | 73 |
| 20. | தமிழ்நாடு வன்னியகுல சத்திரியர் பொது அறநிலைப் பொறுப்பாட்சிகள் மற்றும் நிலைக்கொடைகள் வாரியம் | 79 |
| 21. | சமூக நீதிக்கான தந்தை பெரியார் விருது | 83 |
| 22. | தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் | 84 |
| 23. | தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் | 86 |
| 24. | இணைப்பு | 98 |


# பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை

## மானியக் கோரிக்கை எண். 9

## பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலன்

## கொள்கை விளக்கக் குறிப்பு – 2022–2023

### முன்னுரை

சமூக நீதியை நிலைநாட்டுவதில் இம்மாநிலம் இந்திய நாட்டிற்கே வழிகாட்டியாக திகழ்கிறது. பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பினரை சமூக, கல்வி மற்றும் பொருளாதார நிலைகளில் மேம்படுத்திட பல்வேறு நலத்திட்டங்களை வகுத்து இவ்வரசு செயல்படுத்தி வருகிறது. பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்பினரின் நலனுக்காக அரசு தீட்டும் திட்டங்களை முனைப்புடன் செயல்படுத்துவதற்காக 1969 ஆம் ஆண்டு

பிற்படுத்தப்பட்டோர் நல இயக்ககமும், 1989 ஆம் ஆண்டு மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்ககமும் இவ்வரசால் ஏற்படுத்தப்பட்டன.

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளை சேர்ந்தவர்கள் கல்வி, வேலைவாய்ப்பு, தொழில் மற்றும் அரசியல் போன்ற பல்வேறு நிலைகளில் தங்களது நிலையினை உயர்த்திக் கொள்வதற்கான வாய்ப்புகள் நெடுங்காலமாக மறுக்கப்பட்டு வந்தன. இந்த நிலையினை நன்குணர்ந்த இவ்வரசு, மேற்குறிப்பிட்ட வகுப்பினர் அனைத்துத் துறைகளிலும் ஏற்றம் பெறுவதை இலக்காகக் கொண்டு பல்வேறு நலத்திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தி வருகிறது. இத்தகைய திட்டங்களினால் ஏற்படும் பயன்கள் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பினரின் வாழ்வில் ஒரு மறுமலர்ச்சியையும், நம்பிக்கையையும் ஏற்படுத்தியுள்ளன.



பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்பினரின் சமூக மற்றும் கல்வி நிலைகளைக் குறிப்பிடத்தக்க அளவு மேம்படுத்தத் தமிழகத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் இடஒதுக்கீட்டு கொள்கை பெரும் பங்காற்றியுள்ளது.

கல்வியே ஒரு சமுதாயத்தின் நிலையை மாற்றும் என்று நம்பும் இவ்வரசு பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகப்பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் ஆகியோரது கல்வி நிலையினை மேம்படுத்துவதற்கான பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. இம்மாணவர்களின் நலனுக்காக கல்வி உதவித் தொகை வழங்குதல், தொழிற்கல்வி / பாலிடெக்னிக் / பட்டப்படிப்பு ஆகியவற்றில் இலவச கல்வி அளித்தல், இலவச மிதிவண்டிகள் வழங்குதல், கிராமப்புற மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் இன மாணவிகளுக்கு ஊக்கத்தொகை வழங்குதல் போன்ற

திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. இப்பிரிவு மாணவர்கள் இலவசமாக தங்கிப் பயில விடுதிகள் இத்துறையால் நடத்தப்படுகின்றன. பிரமலைக் கள்ளர் வகுப்பினரின் கல்வி மேம்பாட்டிற்காக மதுரை, தேனி, திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களில் கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள் நடத்தப்பட்டு வருகின்றன. இம்மக்களின் பொருளாதார மேம்பாட்டிற்காக தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் (TABCEDCO) மூலம் இம்மக்கள் சுயதொழில் தொடங்கும் வகையில் கடன் வசதி செய்துதரப்படுகிறது.

2007 ஆம் ஆண்டு சீர்மரபினர் நல வாரியமும், 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு நரிக்குறவர் நல வாரியமும் இவ்வரசால் ஏற்படுத்தப்பட்டு இவ்வாரியங்களில் பதிவு செய்துள்ள உறுப்பினர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகின்றன.



நலிந்த நிலையிலுள்ள இவ்வின மக்களுக்கு சலவைப் பெட்டிகளும், தையல் இயந்திரங்களும் இலவசமாக வழங்கப்படுகின்றன. வீடற்ற பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபின மக்களுக்கு இலவச வீட்டுமனைகள் வழங்கப்படுகின்றன.

ஐக்கிய நாடுகளின் பொது அவையால் 2015 ஆம் ஆண்டில் தெரிவிக்கப்பட்டுள்ள நீடித்த வளர்ச்சி இலக்குகளில் (Sustainable Development Goals), இலக்கு–1 (வறுமையை ஒழித்தல்), இலக்கு–4 (தரமான கல்வி) இலக்கு–10 (ஏற்றத்தாழ்வுகளை குறைத்தல்) ஆகியன இத்துறையுடன் நேரடி தொடர்புடையதாகும். இந்நீடித்த வளர்ச்சி இலக்குகளை அடையும் வகையில் இத்துறை தொடர்ந்து முனைப்புடன் செயலாற்றும்.

## 2. இடஒதுக்கீடு

தமிழ்நாட்டில் 1921 ஆம் ஆண்டு முதல் இடஒதுக்கீடு நடைமுறையில் இருந்து வருகிறது. மாநிலத்தின் மக்கள் தொகையில் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் 88 விழுக்காட்டிற்கும் மேல் உள்ளனர். இடஒதுக்கீட்டின் அளவு பல்வேறு காலங்களில் உயர்த்தப்பட்டது. தற்போது உள்ள 69 விழுக்காடு இடஒதுக்கீடு மாநிலத்தில் 1990 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்படுகிறது.

இந்திய அரசமைப்பு சட்டம் செயல்பாட்டிற்கு வந்தவுடன் "வகுப்புவாரி பிரதிநிதித்துவ அரசாணை" என்று அழைக்கப்பட்ட பல்வேறு பிரிவினர்களுக்கு இடஒதுக்கீடு வழங்கும் ஆணை செல்லாது என உச்சநீதிமன்றத்தால் 1951 ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்டது. இதனை எதிர்த்து தந்தை பெரியார் அவர்கள் தமிழ்நாட்டில் வழி நடத்திய



பெருந்திரளான எதிர்ப்பு ஊர்வலங்கள் மற்றும் கண்டனக் கூட்டங்களின் விளைவாக அரசமைப்பு சட்டத்தில் பிரிவு 15(4) சேர்க்கப்பட்டு முதல் அரசமைப்பு சட்டத் திருத்தத்திற்கு வழி வகுத்தது. பல நூற்றாண்டுகளாக அநீதிக்கு உள்ளாக்கப்பட்டு வந்த பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபின மக்கள் கல்வி, சமூக, மற்றும் பொருளாதார நிலைகளில் மேம்பாடு அடைவதற்கான சமூக நீதிப் போராட்டத்தில் இது ஒரு வரலாற்று சாதனை எனப் போற்றப்படுகிறது.

சிறுபான்மையின சமுதாயத்தினரின் தனி இடஒதுக்கீடு கோரிக்கைகள் மீது தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தின் பரிந்துரையைப் பெற்று பரிசீலித்த அரசு, பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு வழங்கப்பட்டு வந்த 30 விழுக்காடு இடஒதுக்கீட்டிலிருந்து பிற்படுத்தப்பட்ட வகுப்பு முஸ்லீம்களுக்கு 3.5 விழுக்காடு இடஒதுக்கீடு வழங்கும் சட்டத்தினை 2007 ஆம் ஆண்டில்

நிறைவேற்றியது. இச்சட்டம் 15.09.2007 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

சிறுபான்மையின கல்வி நிறுவனங்கள் நீங்கலாக, தனியார் கல்வி நிறுவனங்களிலும் இடஒதுக்கீடு வழங்குவதற்கான சட்டம் 31.05.2006 அன்று இயற்றப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் தற்போது பின்பற்றப்பட்டுவரும் இடஒதுக்கீட்டின் விவரம் பின்வருமாறு:

| வ. எண். | பிரிவு | இடஒதுக்கீடு விழுக்காடு |
|---|---|---|
| 1. | பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் | 26.5 |
| 2. | பிற்படுத்தப்பட்ட வகுப்பு முஸ்லிம்கள் | 3.5 |
| 3. | மிகப்பிற்படுத்தப்பட்ட வகுப்பு / சீர்மரபினர் | 20* |
| 4. | ஆதிதிராவிடர் | 18 |
| 5. | பழங்குடியினர் | 1 |
| | மொத்தம் | 69 |

*மிகப்பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினருக்கு வழங்கப்பட்ட 20 சதவீத



இடஒதுக்கீட்டில் வன்னியர்களுக்கு 10.5 சதவீத இடஒதுக்கீடு வழங்குவதற்கு தமிழ்நாடு சட்டம் 8/2021 இயற்றப்பட்டது. அச்சட்டம் செல்லாது என மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரை கிளை தீர்ப்பளித்தது. அதனை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டு மனுக்களிலும் மாண்புமிகு உச்சநீதிமன்றம், சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரை கிளையின் தீர்ப்பினை உறுதி செய்துள்ளது.

1992 ஆம் ஆண்டு உச்சநீதிமன்றம் இந்திராசஹானி (மண்டல் குழு) வழக்கில் இடஒதுக்கீடு 50 விழுக்காடிற்கு மிகாமல் இருக்க வேண்டுமென்று தீர்ப்பளித்தது. தமிழ்நாட்டில் வழங்கப்பட்டுவரும் 69 விழுக்காடு இடஒதுக்கீட்டினை தொடர்ந்து செயல்படுத்தும் விதமாக, தமிழ்நாடு சட்டம் 45/1994 நிறைவேற்றப்பட்டது. பின்னர் அரசமைப்பு சட்டத்தின் பிரிவு 31–பி - யின் பாதுகாப்பு பெறும் பொருட்டு,

இச்சட்டம் இந்திய அரசமைப்பு சட்டத்தின் ஒன்பதாவது விவர அட்டவணையில் சேர்க்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் கல்வி நிறுவனங்கள் மற்றும் அரசுப்பணிகளில் 69 விழுக்காடு இடஒதுக்கீட்டினை தொடர்ந்து செயல்படுத்திடவும், பேணிகாத்திடவும் இவ்வரசு உறுதி பூண்டுள்ளது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் மேற்கொண்ட தொடர் நடவடிக்கைகளின் காரணத்தினாலும், உயர்நீதிமன்றம் மற்றும் உச்சநீதிமன்றத்தில் வழக்குகள் தொடரச் செய்ததினாலும், இளநிலை மற்றும் முதுநிலை மருத்துவ படிப்புகளுக்கான, அகில இந்திய ஒதுக்கீட்டில், இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 27 சதவீத இட ஒதுக்கீட்டினை 2021-2022 ஆம் கல்வியாண்டில் இருந்து வழங்க, ஒன்றிய அரசு முடிவு செய்துள்ளது. இதன் மூலம் சமூகநீதி பாதுகாக்கப்பட்டுள்ளது.



ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டில் உள்ள உயர்கல்வி நிலையங்கள் உள்ளிட்ட கல்வி நிலையங்களில் மாணவர்கள் சேர்க்கையில் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 27 விழுக்காடு இடஒதுக்கீடு வழங்கும் சட்டத்தினை ஒன்றிய அரசு 2006 ஆம் ஆண்டில் செயல்பாட்டிற்கு கொண்டு வந்ததில் அன்றைய முதல்வர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் மிக முக்கியப் பங்காற்றியுள்ளார்கள்.

ஒன்றிய அரசின் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு (OBC) இடஒதுக்கீடு வழங்கும் போது "வளமான பிரிவினரை" (Creamy layer) நீக்கம் செய்யும் கொள்கையை இவ்வரசு எப்போதும் எதிர்த்து வருகிறது. தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும், முத்தமிழ் அறிஞர் கலைஞரும் வலியுறுத்தி வந்தவாறு, பொருளாதார நிலையை அளவுகோலாகக் (Creamy layer) கருதாமல், சமூக நிலையை மட்டும் கருதி, பிற்படுத்தப்பட்டோர்

அனைவரும் ஒன்றிய அரசின் பணிகளிலும், ஒன்றிய அரசின் கல்வி நிறுவனங்களிலும் இடஒதுக்கீடு பெற வழிவகுக்கும் வகையில் வளமான பிரிவினரை நீக்கம் செய்யாமல் இடஒதுக்கீடு வழங்க வேண்டுமென்று ஒன்றிய அரசை தமிழ்நாடு அரசு வலியுறுத்திக் கேட்டுக் கொள்ளும்.

இந்திய அரசமைப்புச் சட்டம் அரசு பணிகளிலும், கல்வி நிறுவனங்களிலும் இட ஒதுக்கீடு செய்ய வழிவகை செய்கிறது. மாநிலங்களில் உள்ள பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் மக்கள் தொகைக்கேற்ப ஒவ்வொரு மாநிலத்திலும் பின்பற்றப்பட்டு வரும் இட ஒதுக்கீட்டின் அளவு வேறுபடுகிறது. எனவே மாநிலங்கள் தங்கள் தேவைக்கேற்ப இடஒதுக்கீடு விழுக்காட்டை நிர்ணயிக்கும் உரிமை அந்தந்த மாநில அரசுகளுக்கே இருக்க வேண்டும் என்பதற்கேற்ப இந்திய அரசமைப்புச் சட்டத்தில் உரிய திருத்தம்



செய்யுமாறு ஒன்றிய அரசினை தமிழ்நாடு அரசு தொடர்ந்து வலியுறுத்தும்.

ஒன்றிய அரசு உயர் கல்வி நிறுவனங்களில் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு வழங்கப்பட்டுள்ள 27 விழுக்காடு இட ஒதுக்கீடு, முழுமையாக நடைமுறைப்படுத்தப்படுவதில்லை எனத் தெரிய வருகிறது. எனவே, IIT, IIM, AIIMS ஆகிய உயர்கல்வி நிறுவனங்கள் உள்ளிட்ட அனைத்து கல்வி நிறுவனங்களிலும் இதர பிற்படுத்தப்பட்டோருக்கான 27 விழுக்காடு இட ஒதுக்கீட்டினை முழுமையாக நடைமுறைப்படுத்திட வேண்டுமென்று ஒன்றிய அரசை இவ்வரசு தொடர்ந்து வலியுறுத்தும்.

அனைத்து சமுதாய மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான முழுமையான சாதிவாரி மக்கள் தொகைக் கணக்கெடுப்பினை, தேசிய மக்கள் தொகை கணக்கெடுப்புடன் சேர்த்து நடத்திட தமிழ்நாடு அரசு ஒன்றிய அரசைத் தொடர்ந்து வலியுறுத்தும்.

அரசுப் பணிகளில் நியமனங்களுக்கு இடஒதுக்கீடு வழங்கப்பட்டு வருகிறது. இந்திய அரசமைப்புச் சட்டத்தில் தனியார் நிறுவனங்களில் இடஒதுக்கீடு வழங்குவது குறித்து எதுவும் குறிப்பிடப்படவில்லை. தற்போது தனியார் நிறுவனங்களில் வேலைவாய்ப்புகள் பெருகி வருகின்றன. அரசு தனியார் நிறுவனங்களை ஊக்குவிக்கும் விதமாக வரிச்சலுகை போன்று பல்வேறு சலுகைகளை வழங்கி வருகிறது. இந்தப் பயன்கள் பிற்படுத்தப்பட்ட, ஆதிதிராவிடர், பழங்குடியினருக்கும் சென்றடையும் விதத்தில் தனியார் நிறுவனங்களில் வேலைவாய்ப்பில் இடஒதுக்கீடு அவசியம் என கருதப்படுகிறது. இந்திய அரசமைப்பு சட்டத்தில் தகுந்த திருத்தம் கொண்டு வந்தால் மட்டுமே தனியார் துறையிலும் இடஒதுக்கீடு வழங்க இயலும். எனவே, இதற்குத் தேவையான அரசமைப்பு சட்டத் திருத்தம் கொண்டு வர இந்த அரசு ஒன்றிய அரசை வலியுறுத்திக் கேட்டுக் கொள்ளும்.



## 3. கல்வி

"கேடுஇல் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடுஅல்ல மற்றை யவை"
– குறள் 400

கல்வியே அழிவற்ற செல்வம் என்பதை இவ்வரசு நன்கு உணர்ந்துள்ளது. சமூக, பொருளாதார முன்னேற்றத்திற்கு அடிப்படை கல்வியாகும். எனவே இப்பிரிவு மக்கள் கல்வியில் முன்னேற்றம் அடையும்வண்ணம், கல்வி உதவித்தொகைகள் வழங்குதல், கிராமப்புற மாணவியருக்கு ஊக்கத்தொகை வழங்குதல், மிதிவண்டிகள் வழங்குதல், விடுதி வசதிகள் ஏற்படுத்தி தருதல், மதுரை, தேனி, திண்டுக்கல் மாவட்டங்களில் பிரமலைக்கள்ளர் வகுப்பினருக்காக கள்ளர் சீரமைப்பு பள்ளிகள் நடத்துதல் ஆகிய பல்வேறு திட்டங்களை அரசு செயல்படுத்தி வருகிறது.

## 4. கள்ளர் சீரமைப்பு பள்ளிகள்

பிரமலைகள்ளர் வகுப்பினரின் நலனில் சிறப்புகவனம் செலுத்துவதுடன் அவர்களது கல்வித்


தரத்தை திறம்பட மேம்படுத்தும் பொருட்டு இப்பிரிவு மக்கள் அதிகமாக வசிக்கும் மதுரை, தேனி, திண்டுக்கல் மாவட்டங்களில் 295 பள்ளிகள் இத்துறையால் நடத்தப்பட்டு வருகின்றன. இப்பள்ளிகளில் 27,607 மாணவ, மாணவியர் பயின்று வருகின்றனர்.

**அரசு கள்ளர் பள்ளி மாணவ / மாணவியர் எண்ணிக்கை**

| வ. எண் | பள்ளிகளின் விவரம் | பள்ளிகளின் எண்ணிக்கை | மாணாக்கர்களின் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|---|
| | | | மாணவர் | மாணவியர் | மொத்தம் |
| 1. | தொடக்கப் பள்ளிகள் (15 தொடக்கப் பள்ளிகளில் LKG வகுப்பு உட்பட) | 213 | 5334 | 5161 | 10495 |
| 2. | நடுநிலைப் பள்ளிகள் | 22 | 793 | 788 | 1581 |
| 3. | உயர்நிலைப் பள்ளிகள் | 22 | 1477 | 1279 | 2756 |
| 4. | மேல்நிலைப் பள்ளிகள் | 38 | 6,894 | 5,881 | 12,775 |
| | **மொத்தம்** | **295** | **14,498** | **13,109** | **27,607** |




**கள்ளர் சீரமைப்பு பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர் எண்ணிக்கை**




**கடந்த 5 ஆண்டுகளில் கள்ளர் சீரமைப்பு பள்ளிகளில் மாணவ/மாணவியரின் எண்ணிக்கை விவரம்**

| கல்வி ஆண்டு | மாணவ/மாணவியரின் எண்ணிக்கை |
|---|---|
| 2017–2018 | 26,039 |
| 2018–2019 | 24,895 |
| 2019–2020 | 24,544 |
| 2020–2021 | 24,912 |
| 2021–2022 | 27,607 |




**4.1 கள்ளர் சீரமைப்பு பள்ளிகளில் ஆங்கில வழிக்கல்வி**

மதுரை, தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் ஒரு மாவட்டத்திற்கு தலா 5 பள்ளிகள் வீதம் மொத்தம் 15 கள்ளர் சீரமைப்பு ஆரம்பப் பள்ளிகளில், ஆங்கில வழி மழலையர் வகுப்புகளும் (LKG), இதே போன்று இம்மூன்று மாவட்டங்களில் ஒரு மாவட்டத்திற்கு தலா 5 மேல்நிலைப் பள்ளிகள் வீதம் 15 மேல்நிலைப்



பள்ளிகளில் 6ஆம் வகுப்பு முதல் ஆங்கில வழி கல்வி வகுப்புகளும் தொடங்கப்பட்டு தற்போது 15 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் 8 ஆம் வகுப்பு வரை ஆங்கில வழி வகுப்புகள் நடைபெற்று வருகின்றன. இப்பள்ளிகளில் 2022–2023 ஆம் கல்வியாண்டில் 9 ஆம் வகுப்பில் ஆங்கில வழி வகுப்புகள் துவங்கிட ஆணையிடப்பட்டுள்ளது. மேலும், 2021–2022 ஆம் ஆண்டில் ஒன்றாம் வகுப்பு நடைபெற்று வரும் அனைத்து 225 பள்ளிகளிலும் ஒன்றாம் வகுப்பில் ஆங்கில வழி வகுப்புகள் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது. இவ்வாங்கில வழி வகுப்புகளில் 2021 – 2022 ஆம் கல்வியாண்டில் 1,709 மாணவ, மாணவியர் பயின்று வருகின்றனர். அவ்விவரம் பின்வருமாறு:

| வ. எண் | வகுப்புகள் | மாணாக்கர்களின் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|
| | | மாணவர் | மாணவியர் | மொத்தம் |
| 1. | தொடக்கப் பள்ளி மழலையர் (LKG) | 96 | 90 | 186 |

| | | | | |
|---|---|---|---|---|
| 2. | தொடக்கப் பள்ளி மழலையர் (UKG) | 142 | 127 | 269 |
| 3. | 1 முதல் 5 ஆங்கில வழி | 403 | 363 | 766 |
| 4. | 6 முதல் 8 ஆங்கில வழி | 261 | 227 | 488 |
| | **மொத்தம்** | **902** | **807** | **1709** |

கள்ளர் சீரமைப்பு பள்ளி மாணவ, மாணவியருக்கு அரசு/அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியருக்கு வழங்கப்படுவதைப் போன்று, மடிக்கணினி, சிறப்பு ஊக்கத் தொகை, புத்தகப்பை, கணித உபகரணப்பெட்டி, வண்ணப் பென்சில்கள், உலக வரைபடப் புத்தகம் மற்றும் காலணி ஆகியன பள்ளிக் கல்வித் துறையால் வழங்கப்படுகின்றன.

கள்ளர் சீரமைப்பு உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளில் திறன்மிகு வகுப்பறைகள் (smart class rooms) அமைத்து தரப்பட்டுள்ளன. கள்ளர் சீரமைப்பு பள்ளிகளில் பயிலும் கிராமப்புறத்தைச் சார்ந்த மிகப்பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினர் இன மாணவியருக்கு



ஊக்கத் தொகையாக ஆண்டிற்கு 3 ஆம் வகுப்பு முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவியருக்கு ரூ.500 வீதமும், 6 ஆம் வகுப்பு பயிலும் மாணவியருக்கு ரூ.1,000 வீதமும் வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் 2021–2022 ஆம் ஆண்டில் ரூ.12,091.30 இலட்சம் கள்ளர் சீரமைப்பு பள்ளிகளின் நிருவாகத்திற்காக செலவிடப்பட்டுள்ளது.

2022–2023 ஆம் ஆண்டிற்கு ரூ.15,217.77 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 4.2 கள்ளர் சீரமைப்புப் பள்ளிக் கட்டடங்கள் பராமரிப்பு

கள்ளர் சீரமைப்புப் பள்ளிக் கட்டடங்களின் பராமரிப்பு மற்றும் பழுதுபார்க்கும் பணிகளுக்காக ஆண்டுதோறும் ரூ.100 இலட்சம் அரசு ஒதுக்கீடு செய்து வருகிறது. 2021–2022 ஆம் ஆண்டில் இதனுடன் கூடுதல் நிதி ஒதுக்கீடாக ரூ.600 இலட்சம் என மொத்தம் ரூ.700 இலட்சம் மதிப்பீட்டில் 104

கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்படுகிறது.

2022-2023 ஆம் ஆண்டிற்கு கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளின் கட்டட பராமரிப்புக்காக ரூ.734 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

234 கள்ளர் பள்ளி கட்டடங்களில் மாற்றுத்திறனாளி மாணவ, மாணவியருக்கு கழிப்பறை வசதிகள் ரூ.468 இலட்சம் செலவில் ஏற்படுத்த ஆணையிடப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

### 4.3 நபார்டு வங்கி நிதி உதவியுடன் கள்ளர் சீரமைப்பு பள்ளிகளில் உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல்

2021-2022 ஆம் ஆண்டில், நபார்டு வங்கி நிதி உதவியுடன் 92 கள்ளர் சீரமைப்பு பள்ளிகளில் ஆய்வகக் கட்டடங்கள், கூடுதல் வகுப்பறைகள், கூடுதல் கழிவறைகள், ஆழ்துளை கிணறு மற்றும் சுற்றுச்சுவர் அமைத்தல் போன்ற ரூ.5,009.18 இலட்சம்



மதிப்பிலான உட்கட்டமைப்பு வசதி பணிகளை மேற்கொள்ள 14.03.2022 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

### 4.4 கள்ளர் சீரமைப்பு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள்/ ஆசிரியர்களுக்கு பரிசுகள் வழங்கும் திட்டம்

கள்ளர் சீரமைப்பு பள்ளிகளில் பணிபுரியும் தலைமை ஆசிரியர்கள், ஆசிரியர்களை ஊக்குவிக்கும் வகையில் பரிசுகள் வழங்கப்படுகின்றன. கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் 10 மற்றும் 12 ஆம் வகுப்புகளில் பயிலும் மாணவ, மாணவியரை அரசுப் பொதுத் தேர்வில் 95 விழுக்காடு மற்றும் அதற்கு அதிகமாக தேர்ச்சி பெறச் செய்யும் உயர்நிலை/மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு தலா ரூ.10,000 பரிசுத் தொகை மற்றும் நற்சான்றிதழ் வழங்கப்படுகிறது.

கள்ளர் சீரமைப்பு உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளில் 10 மற்றும் 12 ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வுகளில் தத்தமது பாடப்பிரிவில் 100 விழுக்காடு மாணவ, மாணவியரை தேர்ச்சி பெறச் செய்யும் முதுகலைப் பட்டதாரி மற்றும் இளங்கலை பட்டதாரி ஆசிரியர்களுக்கு தலா ரூ.5,000 பரிசுத் தொகையாக வழங்கப்படுகிறது.

2022–2023 ஆம் ஆண்டிற்கு இத்திட்டங்களுக்காக ரூ.31 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 5. கல்வி உதவித்தொகைத் திட்டங்கள்

கல்வியே சமுதாயத்தின் வளர்ச்சியைக் கணக்கிடுவதற்கான அளவுகோலாக அமைகிறது. இதனை நன்குணர்ந்த இவ்வரசு பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பினைச் சார்ந்த மாணவ, மாணவியர் தங்களது கல்வியினை இடையூறின்றி தொடர ஏதுவாக



பள்ளிப்படிப்பு, பள்ளி மேற்படிப்பு, இலவசக் கல்வி, பட்டியலிடப்பட்ட ஒன்றிய அரசு கல்வி நிறுவனங்களான ஐஐடி, ஐஐஎம், ஐஐஐடி, என்ஐடி மற்றும் மத்திய பல்கலைக் கழகங்களில் பயிலும் தமிழ்நாட்டைச் சேர்ந்த மாணவர்களுக்கான கல்வி உதவித்தொகை ஆகிய கல்வி உதவித்தொகைத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. 2021 – 2022 ஆம் ஆண்டில் கல்வி உதவித் தொகை பெறுவதற்கான பெற்றோரது ஆண்டு வருமான வரம்பு ரூ.2.00 இலட்சத்திலிருந்து ரூ.2.50 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.

### 5.1 பள்ளிப்படிப்பு கல்வி உதவித்தொகை

பள்ளிப்படிப்பு கல்வி உதவித்தொகை திட்டத்தின் கீழ், பெற்றோரது ஆண்டு வருமானம் ரூ.2.50 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் ஆங்கில வழியில் 10 ஆம் வகுப்பு பயிலும் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பைச் சார்ந்த

மாணவ, மாணவியர்களுக்கு அவர்களது தேர்வுக் கட்டணம் ஈடு செய்யப்படுகிறது. மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ, மாணவியருக்கு எவ்வித நிபந்தனையுமின்றி இத்தேர்வுக் கட்டணம் ஈடு செய்யப்படுகிறது. (அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் தமிழ் மற்றும் ஆங்கில வழிக் கல்வி பயிலும் மாணவ, மாணவியருக்கு கற்பிப்புக் கட்டணம் மற்றும் சிறப்புக் கட்டணம் செலுத்துவதிலிருந்தும், 10 ஆம் வகுப்பு தமிழ்வழிக் கல்வி பயிலும் மாணவ, மாணவியர் தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்தும் அரசால் விலக்களிக்கப்பட்டுள்ளதால் இக்கட்டணங்களை மாணவ, மாணவியர் செலுத்த வேண்டியதில்லை)

இத்திட்டத்தின் கீழ் 2021–2022 ஆம் ஆண்டில் 98,190 மாணவ, மாணவியர் பயனடையும் வகையில் ரூ.112.92 இலட்சம் செலவிடப்பட்டது. அதன் விபரம் பின்வருமாறு:



| வகுப்பு | மாணவ, மாணவியர் எண்ணிக்கை | தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| பிவ | 53,697 | 61.75 |
| மிபிவ/சீம | 44,493 | 51.17 |
| மொத்தம் | 98,190 | 112.92 |

2022–2023 ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்தின்கீழ் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைக்கு ரூ.103 இலட்சமும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறைக்கு ரூ.86.97 இலட்சமும் என மொத்தம் ரூ.189.97 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 5.2 பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித்தொகை

பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித்தொகை திட்டத்தின்கீழ், பெற்றோரது ஆண்டு வருமானம் ரூ.2.50 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் ஆங்கில வழியில் 11

மற்றும் 12 ஆம் வகுப்புகளில் பயிலும் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பைச் சார்ந்த மாணவ, மாணவியர்களுக்கு அவர்களது தேர்வுக் கட்டணம் ஈடு செய்யப்படுகிறது. மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ, மாணவியருக்கு எவ்வித நிபந்தனையுமின்றி இத்தேர்வுக் கட்டணம் ஈடு செய்யப்படுகிறது. (அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் தமிழ் மற்றும் ஆங்கில வழிக் கல்வி பயிலும் மாணவ, மாணவியருக்கு கற்பிப்புக் கட்டணம் மற்றும் சிறப்புக் கட்டணம் செலுத்துவதிலிருந்தும், 11 மற்றும் 12 ஆம் வகுப்புகளில் தமிழ்வழிக் கல்வி பயிலும் மாணவ, மாணவியருக்கு தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்தும் அரசால் விலக்களிக்கப்பட்டுள்ளதால் இக்கட்டணங்களை மாணவ, மாணவியர் செலுத்த வேண்டியதில்லை)



### 5.2.1 கல்லூரி மாணவ, மாணவியருக்கான கல்வி உதவித்தொகை

பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித் தொகை திட்டத்தின் கீழ், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சார்ந்த ஐ.டி.ஐ, பட்டயப் படிப்பு, பட்ட மேற்படிப்பு, தொழிற்கல்வி மற்றும் ஆராய்ச்சிப் படிப்பு பயிலும் மாணவ, மாணவியருக்கு கல்வி உதவித்தொகை வழங்கப்படுகிறது. இக்கல்வி உதவித்தொகையினை பெற பெற்றோரது ஆண்டு வருமானம் ரூ.2.50 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும். இத்திட்டத்தின்கீழ், கற்பிப்புக் கட்டணம் மற்றும் சிறப்புக் கட்டணம் அரசு கல்வி நிலையங்களில் நிர்ணயிக்கப்பட்ட அளவில் வழங்கப்படுகிறது. தேர்வுக் கட்டணம் முழுமையாகவும், புத்தகக் கட்டணம் கல்வி உதவித்தொகை அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறும் வழங்கப்படுகிறது. அரசு மற்றும்

அரசு உதவி பெறும் கல்லூரிகளில் இரண்டாவது முறைமாற்றம் (Second Shift) வகுப்புகளில் பயிலும் மாணவ, மாணவியருக்கும் காலை நேர அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகளில் பயிலும் மாணவ, மாணவியருக்கு உள்ள அதே விதிமுறைகளுக்கும், வரையறைகளுக்கும் உட்பட்டு கல்வி உதவித்தொகை வழங்கப்படுகிறது. மேலும், உண்டி, உறையுள் கட்டணமாக கல்வி நிலையங்களே நடத்தும் விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியருக்கு மேற்படி கல்வி உதவித்தொகையுடன் பட்டப்படிப்பு பயிலும் மாணவ, மாணவியருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.175 என்ற விகிதத்திலும், தொழிற்கல்வி பயிலும் மாணவ, மாணவியருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.350 என்ற விகிதத்திலும், ஐ.டி.ஐ/பட்டயப்படிப்பு மற்றும் முதுகலை மாணவ, மாணவியருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.225 என்ற விகிதத்திலும் ஆண்டிற்கு 10 மாதங்களுக்கு வழங்கப்பட்டு வந்தது. 2021 – 2022 ஆம் ஆண்டு முதல் இக்கட்டணங்கள் அனைத்து



படிப்புகளுக்கும் ஒரே அளவாக மாதம் ஒன்றுக்கு ரூ.400 ஆக உயர்த்தப்பட்டு, ஆண்டிற்கு 10 மாதங்களுக்கு மொத்தம் ரூ.4,000 வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் 2021–2022 ஆம் ஆண்டில் 3,01,497 மாணவ, மாணவியர் பயனடையும் வகையில் ரூ.7,979.84 இலட்சம் செலவிடப்பட்டது. அதன் விபரம் பின்வருமாறு:

| வகுப்பு | பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவியர் எண்ணிக்கை | தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| பிவ | 1,73,407 | 5,015.24 |
| மிபிவ/சீம | 1,28,090 | 2,964.60 |
| மொத்தம் | 3,01,497 | 7,979.84 |

2022–2023 ஆம் ஆண்டிற்கு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைக்கு ரூ.5,450 இலட்சமும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறைக்கு ரூ.3,100 இலட்சமும் என

மொத்தம் ரூ.8,550 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 6. இலவசக் கல்வி உதவித்தொகை

### 6.1 பட்டப்படிப்பு

அரசு மற்றும் அரசு உதவி பெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் மூன்று ஆண்டு இளங்கலைப் பட்டப்படிப்பு பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சார்ந்த மாணவ, மாணவியருக்கு இலவச கல்வி உதவித்தொகை (பட்டப்படிப்பு) திட்டத்தின் கீழ், சிறப்புக் கட்டணம் மற்றும் திரும்பப் பெற இயலாத கட்டாயக் கட்டணங்கள் ஆகியவை அரசு நிர்ணயித்த அளவில் வழங்கப்படுகின்றது (அரசு மற்றும் அரசு உதவி பெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் மூன்று ஆண்டு இளங்கலைப் பட்டப்படிப்பு பயிலும் மாணவ, மாணவியருக்கு கற்பிப்பு கட்டணம்



செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது). புத்தகக் கட்டணம் கல்வி உதவித் தொகை அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறும் மற்றும் தேர்வுக் கட்டணம் முழுமையாகவும் வழங்கப்படுகிறது. இக்கல்வி உதவித்தொகை எவ்வித நிபந்தனையுமின்றி வழங்கப்படுகிறது. கல்வி நிறுவனங்களுடன் இணைந்துள்ள விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியருக்கு இக்கல்வி உதவித்தொகையுடன், வழங்கப்பட்ட உண்டி உறையுள் கட்டணம் மாதமொன்றுக்கு ரூ.175 லிருந்து ரூ.400 ஆக 2021 – 2022 ஆம் ஆண்டு முதல் உயர்த்தப்பட்டு ஆண்டிற்கு 10 மாதங்களுக்கு மொத்தம் ரூ.4,000 வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் 2021–2022 ஆம் ஆண்டில் 1,96,688 மாணவ, மாணவியர் பயனடையும் வகையில் ரூ.4,095.36 இலட்சம் செலவிடப்பட்டது. அதன் விபரம் பின்வருமாறு:

| வகுப்பு | மாணவ, மாணவியர் எண்ணிக்கை | தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| பிவ | 1,07,265 | 2,298.28 |
| மிபிவ/சீம | 89,423 | 1,797.08 |
| மொத்தம் | 1,96,688 | 4,095.36 |

2022–2023 ஆம் ஆண்டிற்கு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைக்கு ரூ.2,300 இலட்சமும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறைக்கு ரூ.1,900 இலட்சமும் என மொத்தம் ரூ.4,200 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 6.2 பட்டயப்படிப்பு

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சார்ந்த அரசு மற்றும் அரசு உதவி பெறும் பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் (Polytechnics) பட்டயப் படிப்பு பயிலும் மாணவ, மாணவியருக்கு இலவச கல்வி திட்டத்தின்கீழ், கல்வி உதவித்தொகை



வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ், கற்பிப்புக் கட்டணம், சிறப்புக் கட்டணம் மற்றும் திரும்பப் பெற இயலாத கட்டாயக் கட்டணங்கள் அரசு நிர்ணயித்த அளவிலும், புத்தகக் கட்டணம் கல்வி உதவித்தொகை அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறும் மற்றும் தேர்வுக்கட்டணம் முழுமையாகவும் வழங்கப்படுகிறது. பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.2.50 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும் மற்றும் குடும்பத்தில் முதல் பட்டய/பட்டதாரியாக இருக்க வேண்டும் என்ற நிபந்தனைகளுக்குட்பட்டு இக்கல்வி உதவித்தொகை வழங்கப்படுகிறது. மேலும், மேற்படி இக்கல்வி உதவித்தொகையுடன், வழங்கப்பட்ட உண்டி உறையுள் கட்டணம் மாதமொன்றுக்கு ரூ.225 லிருந்து ரூ.400 ஆக 2021 – 2022 ஆம் ஆண்டு முதல் உயர்த்தப்பட்டு ஆண்டிற்கு 10 மாதங்களுக்கு மொத்தம் ரூ.4,000 வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் 2021-2022 ஆம் ஆண்டில் 2,528 மாணவ, மாணவியர் பயனடையும் வகையில் ரூ. 104.05 இலட்சம் செலவிடப்பட்டது. அதன் விபரம் பின்வருமாறு:

| வகுப்பு | மாணவ, மாணவியர் எண்ணிக்கை | தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| பிவ | 1,392 | 58.01 |
| மிபிவ/சீம | 1,136 | 46.04 |
| மொத்தம் | 2,528 | 104.05 |

2022-2023 ஆம் ஆண்டிற்கு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைக்கு ரூ.93 இலட்சம், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறைக்கு ரூ.80 இலட்சம் என மொத்தம் ரூ.173 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



## 6.3 தொழிற்கல்விப் படிப்பு

அரசு ஒதுக்கீட்டின் கீழ் ஒற்றைச் சாளர முறையில் தேர்வு செய்யப்பட்டு அரசு, அரசு உதவிபெறும் கல்லூரிகள் மற்றும் சுயநிதிக் கல்லூரிகளில் தொழிற்படிப்பு பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சார்ந்த மாணவ, மாணவியருக்கு இலவச கல்வி (தொழிற்கல்விப் படிப்பு) திட்டத்தின்கீழ் கல்வி உதவித்தொகை வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் சிறப்புக் கட்டணம் மற்றும் திரும்பப் பெற இயலாத கட்டாயக் கட்டணங்கள் அரசு நிர்ணயித்த அளவிலும், புத்தகக் கட்டணம் கல்வி உதவித் தொகை அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறும் மற்றும் தேர்வுக் கட்டணம் முழுமையாகவும் வழங்கப்படுகிறது. மேலும் பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.2.50 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும் மற்றும் குடும்பத்தில் முதல் பட்டதாரியாக இருக்க வேண்டும்

என்ற நிபந்தனைகளுக்குட்பட்டு இக்கல்வி உதவித்தொகை வழங்கப்படுகிறது. மேலும், மேற்படி இக்கல்வி உதவித்தொகையுடன், வழங்கப்பட்ட உண்டி உறையுள் கட்டணம் மாதமொன்றுக்கு ரூ.350 லிருந்து ரூ.400 ஆக 2021 – 2022 ஆம் ஆண்டு முதல் உயர்த்தப்பட்டு ஆண்டிற்கு 10 மாதங்களுக்கு மொத்தம் ரூ.4,000 வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் 2021–2022 ஆம் ஆண்டில் 1,14,957 மாணவ, மாணவியர் பயனடையும் வகையில் ரூ. 5,946.61 இலட்சம் செலவிடப்பட்டது. அதன் விபரம் பின்வருமாறு:

| வகுப்பு | மாணவ, மாணவியர் எண்ணிக்கை | தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| பிவ | 71,013 | 3,666.49 |
| மிபிவ/சீம | 43,944 | 2,280.12 |
| மொத்தம் | 1,14,957 | 5,946.61 |



2022–2023 ஆம் ஆண்டிற்கு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைக்கு ரூ.4,750 இலட்சமும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறைக்கு ரூ.3,000 இலட்சமும் என மொத்தம் ரூ.7,750 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 6.4 இணையதளம் மூலம் கல்வி உதவித்தொகை ஒப்பளிப்பு செய்தல்

கல்லூரிகளில் பயிலும், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சார்ந்த மாணவ, மாணவியருக்கு தேசிய தகவல் மையத்தால் உருவாக்கப்பட்ட www.bcmbcscholarship.tn.gov.in என்ற இணையதளம் மூலம் கல்வி உதவித்தொகை ஒப்பளிப்பு செய்து வழங்கப்பட்டு வருகிறது. கல்வி உதவித்தொகைகள் அந்தந்த துறைத் தலைமை அலுவலகங்கள் மூலமாகவே ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனிதவள

மேலாண்மை அமைப்பு (IFHRMS) முறையில் மாணவ, மாணவியரின் வங்கிக் கணக்குகளில் நேரடியாக மின்னணு பரிமாற்றம் (ECS) மூலம் வரவு வைக்கப்படுகிறது.

### 7. பட்டியலிடப்பட்ட ஒன்றிய அரசு கல்வி நிறுவனங்களில் பயிலும் மாணவ, மாணவியருக்கான கல்வி உதவித் தொகை திட்டம்.

இத்திட்டத்தின் கீழ், தமிழ்நாடு உட்பட நாடு முழுவதும் உள்ள பட்டியலிடப்பட்ட ஒன்றிய அரசு கல்வி நிறுவனங்களான ஐஐடி, ஐஐஎம், ஐஐஐடி, என்ஐடி மற்றும் மத்திய பல்கலைக் கழகங்களில் பட்டப்படிப்பு மற்றும் பட்டமேற்படிப்பு பயிலும் தமிழ்நாட்டைச் சேர்ந்த பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இன மாணவ, மாணவியருக்கு கல்வி உதவித்தொகை வழங்கப்படுகிறது. நபர் ஒருவருக்கு அதிகபட்சமாக ரூ.2 இலட்சம் வரை இத்திட்டத்தின் கீழ்



கல்வி உதவித்தொகை வழங்கப்படுகிறது. இத்திட்டத்திற்கான பெற்றோரது ஆண்டு வருமான வரம்பு ரூ.2.50 இலட்சம் ஆகும். இத்திட்டத்தின் கீழ் 2021–2022 ஆம் ஆண்டில் 339 மாணவ, மாணவியர் பயனடையும் வகையில் ரூ.282.07 இலட்சம் செலவிடப்பட்டது. நடப்பாண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும். இதற்கான நிதி ஒதுக்கீடு பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித் தொகை திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 7.1 அரசு பள்ளிகளில் பயின்று 7.5 % இடஒதுக்கீட்டின் கீழ் மருத்துவ படிப்புகளில் சேரும் மாணவ / மாணவியருக்கு கல்வி கட்டணம் ஈடு செய்தல்

அரசு பள்ளிகளில் பயின்று 7.5% இடஒதுக்கீட்டின் கீழ் மருத்துவம் மற்றும் பல் மருத்துவம் படிப்புகளில் சேரும் மாணவ/மாணவியருக்கு கல்வி கட்டணம் மருத்துவ கல்வி இயக்ககத்திற்கு ஈடு செய்யப்படுகிறது.

2020–2021 ஆம் கல்வி ஆண்டில் மருத்துவம் மற்றும் பல் மருத்துவம் படிப்பில் சேர்ந்த 317 மாணவ, மாணவியருக்கு கல்வி கட்டணத்தொகையாக ரூ.1,151.30 இலட்சம் மருத்துவ கல்வி இயக்ககத்திற்கு ஈடு செய்யப்பட்டது.

2022–2023 ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்திற்கு ரூ.2,317.10 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**8. மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சார்ந்த கிராமப்புற பள்ளி மாணவியருக்கு ஊக்கத்தொகை வழங்குதல்**

கிராமப்புறங்களில் உள்ள மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபின பெண் குழந்தைகள் ஆரம்பக் கல்வியை இடையிலேயே கைவிடுவதைத் தடுப்பதை நோக்கமாகக் கொண்டு அரசு/அரசு உதவிபெறும் பள்ளிகளில் 3ஆம் வகுப்பு முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் கிராமப்புற மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபின பெண் குழந்தைகளுக்கு வருடத்திற்கு ரூ.500 வீதமும், 6 ஆம் வகுப்பில் பயிலும் கிராமப்புற



மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபின பெண் குழந்தைகளுக்கு வருடத்திற்கு ரூ.1,000 வீதமும் ஊக்கத் தொகை வழங்கும் திட்டம் 1999–2000 ஆண்டில் தொடங்கப்பட்டு தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் பயன் பெறுவதற்கான பெற்றோரது ஆண்டு வருமான வரம்பு ரூ.72,000– லிருந்து ரூ.1 இலட்சமாக 2021–2022 ஆம் ஆண்டு முதல் உயர்த்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் 2021–2022 ஆம் ஆண்டில் 2,71,641 மாணவியர் பயனடையும் வகையில் ரூ.1,674 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

2022–2023 ஆம் ஆண்டிற்கு ரூ.1,725 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 9. இலவச மிதிவண்டிகள் வழங்கும் திட்டம்

இலவச மிதிவண்டிகள் வழங்கும் திட்டத்தின்கீழ், அரசு, அரசு நிதியுதவி பெறும் மற்றும் பகுதியாக நிதியுதவி பெறும் பள்ளிகளில் 11 ஆம் வகுப்பு பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சார்ந்த மாணவ, மாணவியருக்கு வருமான உச்ச வரம்பின்றி மிதிவண்டிகள் இலவசமாக வழங்கப்படுகின்றன. இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டு 2006–2007 ஆம் ஆண்டு முதல் இலவச பஸ் பாஸ் பெறும் மாணவ, மாணவியர்களுக்கும் இலவச மிதிவண்டிகள் வழங்கப்படுகின்றன.

பள்ளி வளாகத்தில் அமைந்துள்ள விடுதியில் தங்கியுள்ளோர் மற்றும் உண்டி உறைவிடப்பள்ளி மாணவ, மாணவியர் இலவச மிதிவண்டிகள் பெறத் தகுதியற்றவர் ஆவர்.



இத்திட்டத்தின் கீழ் 2021–2022 ஆம் ஆண்டில் ரூ.15,780.08 இலட்சம் மதிப்பீட்டில் 4,00,210 மாணவ, மாணவியருக்கு மிதிவண்டிகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

| வகுப்பு | மாணவ, மாணவியர் எண்ணிக்கை | தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| பிவ | 2,10,839 | 8,310.10 |
| மிபிவ/சீம | 1,89,371 | 7,469.98 |
| மொத்தம் | 4,00,210 | 15,780.08 |

2022–2023 ஆம் ஆண்டிற்கு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைக்கு ரூ.8,100 இலட்சமும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறைக்கு ரூ.7,550 இலட்சமும் என மொத்தம் ரூ.15,650 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 10. விடுதிகள்


கல்வியே பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்டுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர்

வகுப்புகளைச் சார்ந்த மாணவ, மாணவியர் தங்களது வாழ்வில் ஏற்றம் பெற அடிப்படையாகும். இதனை நன்குணர்ந்துள்ள அரசு இம்மாணவ, மாணவியர் பொருளாதார சிரமமின்றி தங்களது கல்வியினை தொடர இலவச உணவு மானியம், தங்கும் வசதியுடன் மொத்தம் 1,336 விடுதிகளை நடத்தி வருகிறது. விடுதிகளின் விவரம் பின்வருமாறு:

| வ. எண் | துறை | விடுதிகள் | விடுதிகளின் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|---|
| | | | மாணவர் | மாணவியர் | மொத்தம் |
| 1 | பிவ | கல்லூரி | 83 | 63 | 146 |
| | | பள்ளி | 380 | 208 | 588 |
| | | மொத்தம் | 463 | 271 | 734 |
| 2 | மிபிவ | கல்லூரி | 43 | 52 | 95 |
| | | பள்ளி | 238 | 113 | 351 |
| | | மொத்தம் | 281 | 165 | 446 |
| 3 | சீம | கல்லூரி | 12 | 8 | 20 |
| | | பள்ளி | 90 | 46 | 136 |
| | | மொத்தம் | 102 | 54 | 156 |
| கல்லூரி | | | 138 | 123 | 261 |
| பள்ளி | | | 708 | 367 | 1075 |
| **மொத்தம்** | | | **846** | **490** | **1336** |



**விடுதிகளின் எண்ணிக்கை**




**ஒப்பளிக்கப்பட்ட மாணவ, மாணவியர் எண்ணிக்கை**


| வ. எண் | துறை | விடுதிகள் | மாணவர்கள் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|---|
| | | | மாணவர் | மாணவியர் | மொத்தம் |
| 1 | பிவ | கல்லூரி | 7540 | 4960 | 12500 |
| | | பள்ளி | 21505 | 11660 | 33165 |
| | | மொத்தம் | 29045 | 16620 | 45665 |
| 2 | மிபிவ | கல்லூரி | 3550 | 4665 | 8215 |
| | | பள்ளி | 12800 | 6225 | 19025 |
| | | மொத்தம் | 16350 | 10890 | 27240 |
| 3 | சீம | கல்லூரி | 1005 | 640 | 1645 |
| | | பள்ளி | 7024 | 3440 | 10464 |
| | | மொத்தம் | 8029 | 4080 | 12109 |

| | | | |
|---|---|---|---|
| கல்லூரி | 12095 | 10265 | 22360 |
| பள்ளி | 41329 | 21325 | 62654 |
| **மொத்தம்** | **53424** | **31590** | **85014** |

### அனுமதிக்கப்பட்ட மாணவ, மாணவியர் எண்ணிக்கை

| வ. எண் | துறை | விடுதிகள் | மாணவர்கள் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|---|
| | | | மாணவர் | மாணவியர் | மொத்தம் |
| 1 | பிவ | கல்லூரி | 6716 | 4309 | 11025 |
| | | பள்ளி | 17417 | 9757 | 27174 |
| | | மொத்தம் | 24133 | 14066 | 38199 |
| 2 | மிபிவ | கல்லூரி | 3233 | 4098 | 7331 |
| | | பள்ளி | 11473 | 5709 | 17182 |
| | | மொத்தம் | 14706 | 9807 | 24513 |
| 3 | சீம | கல்லூரி | 663 | 536 | 1199 |
| | | பள்ளி | 5019 | 2635 | 7654 |
| | | மொத்தம் | 5682 | 3171 | 8853 |
| கல்லூரி | | | 10612 | 8943 | 19555 |
| பள்ளி | | | 33909 | 18101 | 52010 |
| **மொத்தம்** | | | **44521** | **27044** | **71565** |






இவ்விடுதிகளில் 85,014 மாணவ, மாணவியர் தங்கிப் பயன்பெற அனுமதிக்கப்பட்டுள்ளது. இவ்விடுதிகளில் மாணவ, மாணவியர் சேர்க்கைக்கான பெற்றோரது ஆண்டு வருமான வரம்பு 2021–2022 ஆம் ஆண்டு முதல் 1 இலட்சம் ரூபாயிலிருந்து 2 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

ஒவ்வொரு விடுதியிலும் 4 சதவீத இடங்கள் மாற்றுத்திறனாளி மாணவ, மாணவியருக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. மேலும் மீட்கப்படும் குழந்தைத் தொழிலாளர்கள், விடுதிகளில் கல்வி ஆண்டின் இடையிலும் எந்தவித நிபந்தனைகளும் இல்லாமல் சேர்த்துக் கொள்ளவும், படிப்பு முடியும் வரை தங்கிப் பயிலவும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு விடுதியிலும் முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களின் குழந்தைகளுக்கு தலா 5 இடங்கள் கூடுதலாக ஒதுக்கப்பட்டுள்ளன. இவ்விடுதிகளில் ஒப்பளிக்கப்பட்ட எண்ணிக்கைக்குக் கூடுதலாக 10 விழுக்காடு இடங்களில் மாணவ, மாணவியரைச் சேர்க்க மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சியரின் அதிகாரத்திற்குட்பட்ட கூடுதல் இடங்கள் அனுமதிக்கப்பட்ட பின்னரும், தேவை அதிகரிப்பின் விடுதிகளில் ஒப்பளிக்கப்பட்ட எண்ணிக்கைக்குக் கூடுதலாக, மொத்தம் 2,185



மாணவ, மாணவியரைச் சேர்த்திட, துறை தலைவர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டை பிறப்பிடமாக கொண்டு கேரள எல்லையோரப் பகுதியில் உள்ள மலைத் தோட்டங்களில் பணிபுரியும் தோட்டத் தொழிலாளர்களின் குழந்தைகளை தேனி மாவட்டத்தில் உள்ள விடுதிகளில் சேர்ப்பதற்கு ஏதுவாக, சாதி மற்றும் வருமானச் சான்றிதழ் அளிப்பதிலிருந்து அவர்களுக்கு விலக்கு அளிக்கப்பட்டு அவர்களின் பெற்றோர் அளிக்கும் சுய உறுதி மொழி ஏற்கப்படுகிறது.

மீட்கப்பட்ட குழந்தை தொழிலாளர் – 7;
முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களின்
குழந்தைகள் – 3;
கேரள எல்லையோரப் பகுதியில் உள்ள
மலைத் தோட்டங்களில் பணிபுரியும்
தோட்டத் தொழிலாளர்களின் குழந்தைகள் – 229

## 10.1 உணவுக் கட்டணம்

பள்ளி விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியர் ஒருவருக்கு மாதமொன்றுக்கு உணவுக் கட்டணம் ரூ.1,000 ஆகவும், கல்லூரி விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியர் ஒருவருக்கு மாதமொன்றுக்கு உணவுக் கட்டணம் ரூ.1,100 ஆகவும், ஒரு ஆண்டில் 10 மாதங்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. விடுதி மாணவ, மாணவியருக்கான உணவுப் பட்டியலில் மாற்றம் செய்யப்பட்டு, ஆணை வெளியிடப்பட்டுள்ளது. திருத்திய உணவுப் பட்டியல் 03.06.2022 முதல் அமுலுக்கு வருகிறது.

தைப்பொங்கல், குடியரசு தினம், தமிழ் புத்தாண்டு, சுதந்திரதினம் மற்றும் தீபாவளி ஆகிய பண்டிகை நாட்களில் விடுதி மாணவ/ மாணவிகளுக்கு சிறப்பு உணவு கட்டணமாக ஒரு பண்டிகைக்கு பள்ளி விடுதி மாணவ, மாணவியருக்கு



ரூ.40–ம், கல்லூரி விடுதி மாணவ, மாணவியருக்கு ரூ.80–ம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

2021–2022 ஆம் ஆண்டு முதல் விடுதி மாணவ, மாணவியருக்கு சோப்பு, பற்பசை போன்றவற்றுக்காக வழங்கப்பட்டு வரும் மாதாந்திர பல்வகை செலவினத் தொகை பள்ளி விடுதி மாணவ, மாணவியருக்கு மாதம் ஒன்றுக்கு 50 ரூபாயிலிருந்து 100 ரூபாயாகவும், கல்லூரி விடுதி மாணவ, மாணவியருக்கு மாதம் ஒன்றுக்கு 75 ரூபாயிலிருந்து 150 ரூபாயாகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

2021–2022 ஆம் ஆண்டில் விடுதிகளின் உணவுக் கட்டணம், நிர்வாகம், பராமரிப்பு மற்றும் பிற செலவினங்களுக்காக ரூ.23,340.33 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

2022–2023 ஆம் ஆண்டிற்கு மொத்தம் ரூ.33,695.72 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைக்கு ரூ.18,376.36 இலட்சமும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறைக்கு ரூ.15,319.36 இலட்சமும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 10.2 விடுதி மாணவ, மாணவியர் பெறும் இதர பயன்கள்

1. விடுதிகளில் தங்கிப்பயிலும் 10 மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவ, மாணவியர் பொதுத் தேர்வில் சிறந்த மதிப்பெண்கள் பெற்றிட, அவர்களுக்கு இலவச சிறப்பு வழிகாட்டி நூல்கள் வழங்கப்படுகின்றன.

2. 4 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை விடுதியில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியருக்கு, மதிய உணவு திட்ட பயனாளிகளுக்கு வழங்கப்படுவதைப் போன்று வண்ணம் மற்றும் வடிவமைப்பில் நான்கு இணை சீருடைகள் வழங்கப்படுகின்றன.

3. விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியருக்குப் பன்னிரெண்டாம் வகுப்பு



வரை அனைத்து பாடப் புத்தகங்களும் இலவசமாக பள்ளிக் கல்வித் துறையால் வழங்கப்படுகின்றன.

4. அனைத்து விடுதிகள் மற்றும் கள்ளர் சீரமைப்புப் பள்ளி மாணவ, மாணவியருக்கு ஆண்டு தோறும் மூன்று முறை மருத்துவப் பரிசோதனைகள் நடத்தப்படுகின்றன.

5. ஒவ்வொரு விடுதிக்கும் ஒரு ஆங்கிலம் மற்றும் இரண்டு தமிழ் நாளிதழ்கள் வழங்கப்படுகின்றன.

6. விடுதி மாணவ, மாணவியருக்கு பாய்கள், ஜமக்காளங்கள், போர்வைகள், எவர்சில்வர் தட்டுகள் மற்றும் தண்ணீர் குவளைகள் (tumbler) வழங்கப்படுகின்றன.

7. மலைப் பிரதேசங்களில் உள்ள விடுதி மாணவ, மாணவியருக்கு கம்பளி ஆடை வழங்கப்படுகிறது.

8. 10 மற்றும் 12 ஆம் வகுப்பு மற்றும் கல்லூரி விடுதி மாணவ, மாணவியருக்கு வேலைவாய்ப்புகள் பெறுவதற்காக நடத்தப்படும் பல்வேறு போட்டித் தேர்வுகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த வாழ்க்கை வழிகாட்டி

நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன.

9. விடுதிகளில் அவசர பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ள விடுதி ஒன்றுக்கு ஓராண்டிற்கு ரூ.50,000 வழங்கப்படுகிறது.

10. பள்ளி மற்றும் கல்லூரி விடுதிகளில் நூலகப் புத்தகங்கள், புத்தக அலமாரிகள், விளையாட்டு பொருட்கள், வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி, மாவரைக்கும் இயந்திரம், மின்அரைப்பான், நீர் சுத்திகரிப்புக் கருவி, சுகாதாரகுட்டைத்தகளி, தீயணைப்பான் கருவிகள், இட்லி வேகவைப்பான்கள் மற்றும் பூச்சி அழிப்பான் மின் கருவி ஆகியன வழங்கப்படுகின்றன. இவற்றுடன் கல்லூரி விடுதிகளுக்கு இரண்டடுக்கு கட்டில்கள், இன்வர்ட்டர் கருவி, பார்வை குறிப்புப் புத்தகங்கள், உடனடி மாவரைக்கும் இயந்திரம் மற்றும் நீராவி கொதிக்கலன் வழங்கப்படுகின்றன.

11. மாலை நேர சிற்றுண்டியாக தினந்தோறும் சுண்டல் மற்றும் சுக்குமல்லி காபி / தேநீர் வழங்கப்படுகின்றன.

12. மாணவ / மாணவியர் ஒருவருக்கு ஒரு மாதத்திற்கு 20 முட்டைகள் வழங்கப்படுகின்றன. முட்டை சாப்பிடாதவர்களுக்கு வாழைப்பழங்கள் வழங்கப்படுகின்றன.



13. ஒவ்வொரு மாதத்தின் முதல் மற்றும் மூன்றாம் புதன்கிழமைகளில் ஆட்டிறைச்சியும், இரண்டாம் மற்றும் நான்காம் புதன்கிழமைகளில் கோழி இறைச்சியும் வழங்கப்படுகின்றன.

## 11. அரசால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் விடுதிகளுக்கு உணவு மானியம்

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பு மாணவ, மாணவியர் பயனடையும் வகையில் 39 தனியார் விடுதிகள் அரசால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. இவ்விடுதிகளில் அனுமதிக்கப்பட்டுள்ள மாணவ, மாணவியர்களில், பெற்றோர்களது ஆண்டு வருமானம் ரூ.2 இலட்சத்துக்கு மிகாத பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பு மாணவ, மாணவியருக்கு அவர்களின் உணவுச்

செலவினங்களுக்காக நபர் ஒருவருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.1,000 வீதம் 10 மாதங்களுக்கு உணவு மானியம் வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் 2021-2022 ஆம் ஆண்டில் 980 மாணவ, மாணவியர் பயன்பெறும் வகையில் ரூ.30.99 இலட்சம் செலவிடப்பட்டது.

2022-2023 ஆம் ஆண்டிற்கு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைக்கு ரூ.41.11 இலட்சமும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறைக்கு ரூ.46.79 இலட்சமும் என மொத்தம் ரூ.87.90 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 12. விடுதிகளுக்கு பரிசுகள் வழங்குதல்

### (i) <u>மாநில அளவிலான பரிசுகள்</u>

மாநில அளவில் 3 சிறந்த விடுதிகளை தேர்ந்தெடுத்து அவ்விடுதிகளுக்கு கேடயம் மற்றும் நினைவுப் பரிசுகள் வழங்கப்படுகின்றன. மேலும்,



அவ்விடுதிகளில் பணியாற்றும் பணியாளர்களுக்கும் பரிசுகள் வழங்கப்படுகின்றன. அதன் விவரம் பின்வருமாறு:

| வ. எண். | வகை | முதல் பரிசு ரூ. | இரண்டாம் பரிசு ரூ. | மூன்றாம் பரிசு ரூ. |
|---|---|---|---|---|
| 1. | காப்பாளர்/ காப்பாளினி | 20,000 | 15,000 | 10,000 |
| 2. | காவலர் மற்றும் ஏவலர் | 10,000 | 5,000 | 3,000 |
| 3. | சமையலர் | 10,000 | 5,000 | 3,000 |
| 4. | தூய்மைப் பணியாளர் | 5,000 | 3,000 | 2,000 |

இத்திட்டத்தின் கீழ் 2021-2022 ஆம் ஆண்டில் பரிசுகள் வழங்குவதற்காக ரூ 1.37 இலட்சம் செலவிடப்பட்டது.

2022-2023 ஆம் ஆண்டிற்கு ரூ.1.37 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### (ii) <u>மாவட்ட அளவிலான பரிசுகள்</u>

விடுதிகள் சிறப்பாக செயல்படுவதை ஊக்கப்படுத்தும் வகையில் ஆண்டுதோறும் மாவட்ட

அளவில் ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள பிற்படுத்தப்பட்டோர்/ மிகப்பிற்படுத்தப்பட்டோர்/ சீர்மரபினர் நல விடுதிகளுள் 3 விடுதிகளையும், கள்ளர் சீரமைப்பு விடுதிகளுள் 3 விடுதிகளையும் தேர்வு செய்து நினைவுப் பரிசும் காப்பாளர்/ காப்பாளினிகளுக்கு பரிசுகளும் வழங்கும் புதிய திட்டம் 2021-2022 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. காப்பாளர் / காப்பாளினிகளுக்கு முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் பரிசாக முறையே ரூ.10,000, ரூ.5,000 மற்றும் ரூ.3,000 வழங்கப்படுகிறது.

மாவட்ட அளவிலான பரிசுகள் வழங்குவதற்காக 2022-2023 ஆம் ஆண்டிற்கு ரூ.7.80 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



## 13. விடுதிகளுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டுதல்

மொத்தமுள்ள 1,336 பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல விடுதிகளில் 1,274 விடுதிகள் சொந்தக் கட்டடங்களில் செயல்பட்டு வருகின்றன மற்றும் 62 விடுதிகள் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. இவற்றுள் 31 விடுதிகளுக்கு கட்டடம் கட்ட ஆணையிடப்பட்டு பணிகள் பொதுப்பணித் துறை மூலம் நடைபெற்று வருகின்றன. மீதமுள்ள 31 விடுதிகளுக்கு மாணவர்களின் எண்ணிக்கை அடிப்படையில் சொந்த கட்டடங்கள் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

2021-2022 ஆம் ஆண்டில் கட்டுமானப் பணிகளுக்காக ரூ.1,599.48 இலட்சம் செலவிடப்பட்டது.

இத்திட்டத்திற்காக 2022–2023 ஆம் ஆண்டிற்கு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைக்கு ரூ.934 இலட்சமும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறைக்கு ரூ.1,260 இலட்சமும் என மொத்தம் ரூ.2,194 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 14. விடுதி கட்டடங்கள் பராமரிப்பு

ஆண்டுதோறும் நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டு பொதுப்பணித்துறை மூலம் அரசு சொந்தக் கட்டடங்களில் இயங்கி வரும் விடுதிகளின் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இப்பணிகளுக்காக 2021–2022 ஆம் ஆண்டில் ரூ.630 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு 94 விடுதிகளின் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இது தவிர 2021–2022 ஆம் ஆண்டில் விடுதிகளுக்கு சிறப்பு பராமரிப்பு மற்றும் பழுது பார்த்தல் பணிகளுக்கு என கூடுதலாக ரூ.1,300 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு,



விடுதிகளில் பராமரிப்பு மற்றும் பழுது பார்த்தல் பணிகள் பொதுப்பணித்துறை மூலம் மேற்கொள்ளப்பட உள்ளன.

2022–2023 ஆம் ஆண்டிற்கு விடுதிகளின் பராமரிப்பு பணிகளுக்காக ரூ.660.25 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 15. சீருடைகள் வழங்குதல்

கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் எட்டாம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்கு 4 இலவச இணை சீருடைகள் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமை துறையால் ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்படுகின்றன. பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் விடுதிகளில் தங்கி 10 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்கு 4 இணை சீருடைகள் இலவசமாக ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்படுகின்றன. இச்சீருடைகள் வண்ணம் மற்றும் வடிவமைப்பில் அரசுப் பள்ளிகளில்

பின்பற்றப்படுவது போலவே வழங்கப்படுகின்றன. சீருடைக்கான துணிகள் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்திடமிருந்து கொள்முதல் செய்யப்பட்டு, மாவட்ட மகளிர் தையல் தொழில் கூட்டுறவு சங்கங்கள் மூலம் தைத்து வழங்கப்படுகின்றன.

இத்திட்டத்தின் கீழ் 2021-2022 ஆம் ஆண்டில் 25,691 மாணவ, மாணவியர் பயனடையும் வகையில் ரூ.356.96 இலட்சம் செலவிடப்பட்டது.

2022-2023 ஆம் ஆண்டிற்கு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைக்கு ரூ.250 இலட்சமும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறைக்கு ரூ.226.19 இலட்சமும் என மொத்தம் ரூ.476.19 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



## 16. பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள்

### 16.1 இலவச சலவைப் பெட்டிகள் வழங்குதல்

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சார்ந்த ஏழ்மை நிலையில் உள்ள சலவைத் தொழில் செய்பவர்களின் பொருளாதார நிலையை மேம்படுத்த இலவச சலவைப் பெட்டிகள் வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ் பயன்பெறுவதற்கான பயனாளிகளின் ஆண்டு வருமான வரம்பு ரூ.72,000-லிருந்து ரூ.1 இலட்சமாக 2021-2022 ஆம் ஆண்டில் உயர்த்தப்பட்டுள்ளது.

ஆண்டுதோறும் வழங்கப்படும் சலவைப் பெட்டிகளின் எண்ணிக்கை, 2021-2022 ஆம் ஆண்டு முதல் 2,000- லிருந்து 3,000 ஆக உயர்த்தப்பட்டு 2021-2022 ஆம் ஆண்டிற்கு 3,000 சலவைப் பெட்டிகள் ரூ.146.13 இலட்சம் செலவில் வழங்கப்படுகிறது.

2022-2023 ஆம் ஆண்டிற்கு ரூ.146.13 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 16.2 இலவச தையல் இயந்திரங்கள் வழங்குதல்

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பினருள் ஏழ்மை நிலையிலுள்ளவர்களின் பொருளாதார நிலையை மேம்படுத்த மின்மோட்டார் பொருத்தப்பட்ட தையல் இயந்திரங்கள் இலவசமாக வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ் பயன்பெறுவதற்கான பயனாளிகளின் ஆண்டு வருமான வரம்பு ரூ.72,000-லிருந்து ரூ.1 இலட்சமாக 2021-2022 ஆம் ஆண்டில் உயர்த்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்காக 2022-2023 ஆம் ஆண்டிற்கு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைக்கு ரூ.71.50 இலட்சமும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறைக்கு ரூ.67.66 இலட்சமும் என மொத்தம் ரூ.139.16 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



**பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் சமூக, பொருளாதார முன்னேற்றம் அடையும் வண்ணம், தற்போது நடைமுறையிலுள்ள சலவைப்பெட்டிகள் வழங்குதல், தையல் இயந்திரங்கள் வழங்குதல் ஆகிய வாழ்வாதார திட்டங்களை ஆய்வு செய்து மாறிவரும் பொருளாதார சூழலுக்கு ஏற்றவாறு மறுசீரமைக்கப்படும்.**

## 17. இலவச வீட்டு மனை வழங்குதல்

நலிவுற்ற மக்கள் தங்களுக்கான உறைவிடத்தை அமைத்து கொள்ளும் வகையில் இலவச வீட்டுமனைகள் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ், வீட்டு மனையற்ற பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பினருக்கு வீட்டு மனைகள் இலவசமாக வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ் பயன்பெறுவதற்கான பயனாளிகளின் ஆண்டு

வருமான வரம்பு ரூ.72,000–லிருந்து ரூ.1 இலட்சமாக 2021–2022 ஆம் ஆண்டில் உயர்த்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் 2021–2022 ஆம் ஆண்டில் 315 பயனாளிகளுக்கு ரூ.293.71 இலட்சம் செலவில் வீட்டுமனைகள் வழங்கப்பட்டுள்ளன.

2022–2023 ஆம் ஆண்டிற்கு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைக்கு ரூ.200 இலட்சமும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறைக்கு ரூ.150.02 இலட்சமும் என மொத்தம் ரூ.350.02 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 18. சீர்மரபினர் நல வாரியம்

"சீர்மரபினர் நல வாரியம்", சீர்மரபினர் வகுப்பினரின் சமூக, பொருளாதார மற்றும் கல்வி மேம்பாட்டிற்காக 2007 ஆம் ஆண்டில் அரசால் அமைக்கப்பட்டது. இவ்வாரியத்தில் உறுப்பினராக



பதிவு செய்ய 18 வயது நிறைவு செய்து 60 வயதுக்கு மேற்படாதவர்களாக இருத்தல் வேண்டும். இவ்வாரியத்தில் பதிவு செய்துள்ள உறுப்பினர்களுக்கு அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கு, தொழிலாளர் நலன் – திறன் மேம்பாட்டுத் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வரும் நல வாரியங்கள் மூலம் வழங்கப்பட்டு வரும் நல உதவித் திட்டங்கள் போன்று விபத்து நிவாரணம், கல்வி உதவித்தொகை, திருமண உதவித்தொகை, மகப்பேறு உதவித்தொகை மற்றும் முதியோர் ஓய்வூதியம் ஆகிய உதவிகள் வழங்கப்படுகின்றன. இந்நலவாரியத்திற்கென இதுவரை ரூ.200 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2021–2022 ஆம் ஆண்டில் 235 நபர்கள் புதிய உறுப்பினர்களாக பதிவு செய்யப்பட்டு, இவ்வாரியத்தில் இதுவரை மொத்தம் 35,194 நபர்கள் உறுப்பினர்களாக உள்ளனர். இவ்வாரியத்தின் மூலம் 2021–2022 ஆம் ஆண்டில் 135 பயனாளிகளுக்கு

ரூ.14.33 இலட்சம் செலவில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

**சீர்மரபினர் நல வாரியத்தில் பதிவு செய்துள்ள உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் நல உதவிகள்**

| வ. எண். | நிதி உதவிகள் விவரம் | | உதவித் தொகை ரூ. |
|---|---|---|---|
| 1. | அ) | விபத்து ஈட்டுறுதித் திட்டத்தின் கீழ் உதவித் தொகை விபத்தினால் ஏற்படும் மரணம் | 1,00,000 |
| | ஆ) | விபத்தினால் ஏற்படும் ஊனம் | 10,000 முதல் 1,00,000 வரை |
| 2. | | இயற்கை மரணம் | 20,000 |
| 3. | | ஈமச்சடங்கு செலவினம் | 5,000 |
| 4. கல்வி உதவித்தொகை | | | |
| | அ) | 10 ஆம் வகுப்பு படித்து வரும் பெண் குழந்தைகளுக்கு | 1,000 |
| | ஆ) | 10 ஆம் வகுப்பு தேர்ச்சிப் பெற்றவர்களுக்கு | 1,000 |



| வ. எண். | நிதி உதவிகள் விவரம் | | உதவித் தொகை ரூ. |
|---|---|---|---|
| | இ) | 11 ஆம் வகுப்பு படித்து வரும் பெண் குழந்தைகளுக்கு | 1,000 |
| | ஈ) | 12 ஆம் வகுப்பு படித்து வரும் பெண் குழந்தைகளுக்கு | 1,500 |
| | உ) | 12 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு | 1,500 |
| | ஊ) | (i) முறையான பட்டப் படிப்பிற்கு | 1,500 |
| | | (ii) விடுதி வசதியுடன் கூடிய முறையான பட்டப்படிப்பிற்கு | 1,750 |
| | எ) | (i) முறையான பட்ட மேற்படிப்பிற்கு | 4,000 |
| | | (ii) விடுதி வசதியுடன் கூடிய முறையான பட்ட மேற்படிப்பிற்கு | 5,000 |
| | ஏ) | (i) தொழிற்கல்வி பட்டப் படிப்பிற்கு | 4,000 |
| | | (ii) விடுதி வசதியுடன் தொழிற்கல்வி பட்டப் படிப்பிற்கு | 6,000 |

| வ. எண். | | நிதி உதவிகள் விவரம் | உதவித் தொகை ரூ. |
|---|---|---|---|
| | ஐ) | (i) தொழிற்கல்வி பட்ட மேற்படிப்பிற்கு | 6,000 |
| | | (ii) விடுதி வசதியுடன் தொழிற்கல்வி பட்ட மேற்படிப்பிற்கு | 8,000 |
| | ஒ) | (i) ஐ.டி.ஐ அல்லது தொழிற் பயிற்சிப் படிப்பிற்கு | 1,000 |
| | | (ii) விடுதி வசதியுடன் ஐ.டி.ஐ அல்லது தொழிற் பயிற்சிப் படிப்பிற்கு | 1,200 |
| 5. | | திருமண உதவித்தொகை<br>(i) ஆண்களுக்கு<br>(ii) பெண்களுக்கு | <br>3,000<br>5,000 |
| 6. மகப்பேறு உதவித்தொகை | | | |
| | அ) | மாதம் ஒன்றுக்கு ரூ.1,000 வீதம் (6 மாதங்களுக்கு) | 6,000 |
| | ஆ) | கருச்சிதைவு / கருக்கலைப்பு | 3,000 |
| 7. | | மூக்குக்கண்ணாடி செலவுத் தொகையை ஈடுசெய்தல் | 500 வரை |



| வ. எண். | | நிதி உதவிகள் விவரம் | உதவித் தொகை ரூ. |
|---|---|---|---|
| 8. | | முதியோர் ஓய்வூதியம் (மாதந்தோறும்) | 1,000 |

இதுவரை இவ்வாரியத்தில் பதிவு செய்துள்ள 3,533 உறுப்பினர்களுக்கு ரூ.95.24 இலட்சம் மதிப்பிலான நல உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

வலையர், அம்பலக்காரர் (சேர்வை உட்பட) இனத்தை சேர்ந்த மக்களின் நலனுக்காக பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்த "வலையர் அம்பலக்காரர் (சேர்வை உட்பட) புனரமைப்பு வாரியம்" அமைத்திட ஆணையிடப்பட்டுள்ளது.

## 19. தமிழ்நாடு நரிக்குறவர் நல வாரியம்

நரிக்குறவர்களுக்கு கல்வி, மாற்று தொழில் புரிவதற்கான உதவி ஆகியவற்றை அளிக்கவும், அவர்களுக்கு பல்வேறு நல உதவிகள் வழங்குவதற்கும் தமிழ்நாடு நரிக்குறவர் நல வாரியம்

2008 ஆம் ஆண்டில் அரசால் அமைக்கப்பட்டது. இவ்வாரியத்தில் உறுப்பினராக பதிவு செய்ய 18 வயது நிறைவு செய்து 60 வயதுக்கு மேற்படாதவர்களாக இருத்தல் வேண்டும். இவ்வாரியத்தில் பதிவு செய்துள்ள உறுப்பினர்களுக்கு அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கு, தொழிலாளர் நலன் – திறன் மேம்பாட்டுத் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வரும் நல வாரியங்கள் மூலம் வழங்கப்பட்டு வரும் நல உதவித் திட்டங்கள் போன்று விபத்து நிவாரணம், கல்வி உதவித்தொகை, திருமண உதவித்தொகை, மகப்பேறு உதவித்தொகை மற்றும் முதியோர் ஓய்வூதியம் ஆகிய உதவிகள் வழங்கப்படுகின்றன.

இவ்வாரியத்தில் பதிவு செய்துள்ள உறுப்பினர்கள் தனிநபராகத் தொழில் துவங்க ரூ.7,500 மானியமும், குழுவாகத் தொழில் துவங்க அதிகபட்சமாக ரூ.1,25,000 பின்நிகழ்வு மானியமும் (Back ended subsidy) வழங்கப்படுகிறது.



இவ்வாரியத்திற்கென இதுவரை ரூ.1,075 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2021–2022 ஆம் ஆண்டில் 200 நபர்கள் புதிய உறுப்பினர்களாக பதிவு செய்யப்பட்டு, இவ்வாரியத்தில் இதுவரை மொத்தம் 15,776 நபர்கள் உறுப்பினர்களாக உள்ளனர். இவ்வாரியத்தின் மூலம் 2021–2022 ஆம் ஆண்டில் 186 பயனாளிகளுக்கு ரூ.17.14 இலட்சம் செலவில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

**தமிழ்நாடு நரிக்குறவர் நல வாரியத்தில் பதிவு செய்துள்ள உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் நல உதவிகள்**

| வ. எண். | | நிதி உதவிகள் விவரம் | உதவித் தொகை ரூ. |
|---|---|---|---|
| 1. | அ) | விபத்து ஈட்டுறுதித் திட்டத்தின் கீழ் உதவித் தொகை விபத்தினால் ஏற்படும் மரணம் | 1,00,000 |
| | ஆ) | விபத்தினால் ஏற்படும் ஊனம் | 10,000 |

| வ. எ ண். | | நிதி உதவிகள் விவரம் | உதவித் தொகை ரூ. |
|---|---|---|---|
| | | | முதல் 1,00,000 வரை |
| 2 | | இயற்கை மரணம் | 20,000 |
| 3 | | ஈமச்சடங்கு செலவினம் | 5,000 |
| 4. கல்வி உதவித்தொகை | | | |
| | அ) | ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்கு | 500 |
| | ஆ) | 6ஆம் வகுப்பு முதல் 9ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்கு | 1,000 |
| | இ) | 10ஆம் வகுப்பு படித்துவரும் பெண் குழந்தைகளுக்கு | 1,000 |
| | ஈ) | 10 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு | 1,000 |
| | உ) | 11 ஆம் வகுப்பு படித்துவரும் பெண் குழந்தைகளுக்கு | 1,000 |
| | ஊ) | 12 ஆம் வகுப்பு படித்துவரும் பெண் குழந்தைகளுக்கு | 1,500 |



| வ. எ ண். | | நிதி உதவிகள் விவரம் | உதவித் தொகை ரூ. |
|---|---|---|---|
| | எ) | 12 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு | 1,500 |
| | ஏ) | (i) முறையான பட்டப் படிப்பிற்கு | 1,500 |
| | | (ii) விடுதி வசதியுடன் கூடிய முறையான பட்டப்படிப்பிற்கு | 1,750 |
| | ஐ) | (i) முறையான பட்ட மேற்படிப்பிற்கு | 4,000 |
| | | (ii) விடுதி வசதியுடன் கூடிய முறையான பட்ட மேற்படிப்பிற்கு | 5,000 |
| | ஒ) | (i) தொழிற்கல்வி பட்டப் படிப்பிற்கு | 4,000 |
| | | (ii) விடுதி வசதியுடன் தொழிற்கல்வி பட்டப்படிப்பிற்கு | 6,000 |
| | ஓ) | (i) தொழிற்கல்வி பட்ட மேற்படிப்பிற்கு | 6,000 |
| | | (ii) விடுதி வசதியுடன் தொழிற்கல்வி பட்ட மேற்படிப்பிற்கு | 8,000 |

| வ. எண். | நிதி உதவிகள் விவரம் | | உதவித் தொகை ரூ. |
|---|---|---|---|
| | ஔ) | (i) ஐ.டி.ஐ அல்லது தொழிற் பயிற்சிப் படிப்பிற்கு | 1,000 |
| | | (ii) விடுதி வசதியுடன் ஐ.டி.ஐ அல்லது தொழிற் பயிற்சிப் படிப்பிற்கு | 1,200 |
| 5. | | திருமண உதவித் தொகை<br>(i) ஆண்களுக்கு<br>(ii) பெண்களுக்கு | <br>3,000<br>5,000 |
| 6. | மகப்பேறு உதவித்தொகை | | |
| | அ) | மகப்பேறு மாதம் ஒன்றுக்கு ரூ.1,000 வீதம் (6 மாதங்களுக்கு) | 6,000 |
| | ஆ) | கருச்சிதைவு /கருக்கலைப்பு | 3,000 |
| 7. | | மூக்குக்கண்ணாடி செலவுத் தொகையை ஈடுசெய்தல் | 500 வரை |
| 8. | | முதியோர் ஓய்வூதியம் (மாதந்தோறும்) | 1,000 |
| 9. | அ) | தனி நபர் தொழில் தொடங்க மானியம் | 7,500 |



| வ. எண். | நிதி உதவிகள் விவரம் | | உதவித் தொகை ரூ. |
|---|---|---|---|
| | ஆ) | குழுவாக தொழில் தொடங்க மானியம் | 10,000 தனி நபருக்கு (அல்லது) 1,25,000 குழுவிற்கு |

இதுவரை இவ்வாரியத்தில் பதிவு செய்துள்ள 14,118 உறுப்பினர்களுக்கு ரூ.798.49 இலட்சம் மதிப்பிலான நல உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

2022-2023 ஆம் ஆண்டிற்கு ரூ.10 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 20. தமிழ்நாடு வன்னியகுல சத்திரியர் பொது அறநிலைப் பொறுப்பாட்சிகள் மற்றும் நிலைக்கொடைகள் வாரியம்

தமிழ்நாட்டில், வன்னியர் சமுதாயத்தினரின் முன்னேற்றத்திற்காக, பல வன்னியர் வள்ளல்களால் உயிலாக எழுதி வைக்கப்பட்ட அறக்கட்டளைகளை

அடையாளம் கண்டு, அவைகளை ஒருங்கிணைத்து, அவை உருவாக்கப்பட்ட நோக்கத்தினை நிறைவேற்றுவதற்கான வழிவகைகளைக் கண்டறிவதற்காக, அரசு 2009 ஆம் ஆண்டு வன்னியர் பொதுச் சொத்து நல வாரியத்தை உருவாக்கியது.

வன்னிய குல சத்திரியர் சமுதாயத்தைச் சேர்ந்த நபர்களால் அல்லது நிறுவனங்களால் உருவாக்கப்பட்ட அத்தகைய பொறுப்பாட்சிகளின் சொத்துக்களையும், நிலைக்கொடைகளின் சொத்துக்களையும் பாதுகாப்பதற்கு, "தமிழ்நாடு வன்னிய குல சத்திரியர் பொது அறநிலைப் பொறுப்பாட்சிகள் மற்றும் நிலைக்கொடைகள் (பாதுகாத்தல் மற்றும் பேணிவருதல்) சட்டம் 2018" என்ற சட்டம் இயற்றப்பட்டது. இச்சட்டமானது 04.02.2019 அன்று முதல் நடைமுறைக்கு வந்துள்ளது.

இச்சட்டத்தினை நடைமுறைப்படுத்தும் வகையில் 1 தலைவர், பதவிவழி உறுப்பினர்கள்



இருவர் உள்ளிட்ட 12 உறுப்பினர்கள் மற்றும் 1 உறுப்பினர் செயலாளர் அடங்கிய தமிழ்நாடு வன்னியகுல சத்திரிய பொது அறநிலைப் பொறுப்பாட்சிகள் மற்றும் நிலைக்கொடைகள் வாரியம் ஒன்று அரசால் உருவாக்கப்பட்டது. இவ்வாரியத்திற்கு நிருவாகச் செலவினங்களை மேற்கொள்ள 2021–2022 ஆம் ஆண்டில் அரசு ரூ.100 இலட்சம் ஒப்பளிப்பு செய்தது.

இவ்வாரியத்தால் கடந்த 2020–2021 ஆண்டு வரை 97 அறக்கட்டளைகள் கண்டறியப்பட்டிருந்தது. 2021–2022 ஆம் ஆண்டில் புதிதாக 22 வன்னிய அறக்கட்டளைகள் கண்டறியப்பட்டு ஆக மொத்தம் 119 அறக்கட்டளைகள் இதுவரை கண்டறியப்பட்டுள்ளன. இந்த அறக்கட்டளைகள் 25 மாவட்டங்களில் அமைந்துள்ளன. இவ்வாறு கண்டறியப்பட்ட அறக்கட்டளைகளுள் 2021–2022 ஆம் ஆண்டில் மட்டும் புதியதாக 28 அறக்கட்டளைகள் இவ்வாரியத்தில் பதிவு

செய்யப்பட்டதன் மூலம் இதுவரை மொத்தம் 64 அறக்கட்டளைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. மீதமுள்ள அறக்கட்டளைகளை பதிவு செய்ய இவ்வாரியத்தால் துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

பதிவு செய்யப்பட்ட அறக்கட்டளைகளுள், இதுவரை 17 வன்னியகுல சத்திரிய பொது அறநிலைப் பொறுப்பாட்சிகள் மற்றும் நிலைக்கொடைகளின் 3,01,679.5 சதுர மீட்டர் பரப்பளவுடைய 97 சொத்துகளின் பட்டியல் தமிழ்நாடு அரசிதழில் அறிவிக்கையாக வெளியிடப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள பதிவு செய்யப்பட்ட அறக்கட்டளைகளின் சொத்துப் பட்டியலினை அரசிதழில் வெளியிட இவ்வாரியத்தால் துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இவ்வாரியத்திற்கு நிருவாகச் செலவினங்களை மேற்கொள்ள 2022-2023 ஆம் ஆண்டிற்கு ரூ.100 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



## 21. சமூக நீதிக்கான தந்தை பெரியார் விருது

தமிழ்நாட்டில் சமூக நீதிக்காகப் போராடியவர்களை சிறப்பு செய்யும் பொருட்டு ஆண்டு தோறும் சமூக நீதிக்கான தந்தை பெரியார் விருதினை அரசு வழங்கி வருகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தேர்வு செய்யப்படும் ஒருவருக்கு இவ்விருது வழங்கப்படுகிறது. இவ்விருது பெறுபவருக்கு விருது தொகையாக 1 இலட்சம் ரூபாயும், ஒரு சவரன் தங்கப் பதக்கமும் வழங்கப்பட்டு வந்தது. இவ்விருதுத் தொகை 2021-2022 ஆம் ஆண்டில் ரூ.1 இலட்சத்திலிருந்து ரூ.5 இலட்சமாக உயர்த்தப்பட்டு, இவ்விருது பெறுபவருக்கு ஒரு சவரன் தங்கப் பதக்கமும், ரூ.5 இலட்சம் விருதுத் தொகையும் வழங்கப்படுகிறது. 2021 ஆம் ஆண்டிற்கான தந்தை பெரியார் விருது திரு க. திருநாவுக்கரசு அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

2022–2023 ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்திற்காக ரூ.5.80 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 22. தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையம்

இந்திராசஹானி வழக்கில், உச்ச நீதிமன்றம் அளித்த வழிகாட்டுதல்களின் அடிப்படையில் ஒரு நிலையான அமைப்பாக தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் அமைக்கப்பட்டு, 15.3.1993 அன்று முதல் ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதியரசரின் தலைமையில் உறுப்பினர்களுடன் செயல்பட்டு வருகிறது. இந்த ஆணையம் 3 ஆண்டுகளுக்கு ஒருமுறை திருத்தி அமைக்கப்படுகிறது.

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தின் பணிகள் நீதிமுறை சார்புடைய (quasi–judicial) தன்மை வாய்ந்தது. இவ்வாணையத்தின் செயல் வரம்புகளாவன:–



(i) பிற்படுத்தப்பட்டோர் / மிகப்பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கக் கோருதல் தொடர்பான மனுக்கள் மற்றும் பட்டியல்களில் மிகுதியாக சேர்க்கப்பட்டிருத்தல் அல்லது சேர்க்கப்படாமல் இருத்தல் குறித்தான முறையீடுகள் ஆகியவற்றைப் பெற்று, ஆய்வு செய்து மற்றும் அதன்மீது பரிந்துரைகளை ஆணையம் வழங்கும்;

(ii) அவ்வப்போது எடுக்கப்படும் முடிவுகளின்படி, பிற்படுத்தப்பட்டோர்/ மிகப்பிற்படுத்தப்பட்டோர் பட்டியல்களை காலமுறைப்படி சீராய்வு செய்யும்;

(iii) இந்திய அரசமைப்புச் சட்டத்தின் கூறு 16(4) மற்றும் இதர பிற தொடர்புடைய கூறுகளின் அடிப்படையிலும், இப்பொருள் தொடர்பாக உச்சநீதிமன்றம் எடுத்துள்ள பல்வேறு முடிவுகளையொட்டியும் ஆணையத்தின் பரிந்துரைகள் அமைய வேண்டும்;

(iV) கிறித்துவர், இசுலாமியர் மற்றும் பிற சிறுபான்மையினர் ஆகியோரில் அவர்களின் சமூக மற்றும் கல்வி ரீதியிலான பிற்படுத்தப்பட்ட நிலையின் அடிப்படையில் மேம்படுத்தப்பட்ட இடஒதுக்கீடு வழங்குதல் குறித்து ஆணையம் பரிந்துரை வழங்கும்;

(V) மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள இடஒதுக்கீட்டிலிருந்து, உள்ஒதுக்கீடு கோரி பல்வேறு சமுதாயங்கள் வைத்துள்ள முறையீடுகளை ஆராய்ந்து ஆணையம் பரிந்துரை வழங்கும்.

(Vi) அவ்வப்போது அரசால் பரிந்துரை கோரப்படும் பிற்படுத்தப்பட்டோர் தொடர்பான பொருள்கள் பிறவற்றையும் ஆய்வு செய்து பரிந்துரை வழங்கும்.

இவ்வாணையம் நீதியரசர் திரு எம். தணிகாசலம் (ஓய்வு) அவர்களின் தலைமையில் 6 உறுப்பினர்களுடன் 08.07.2020 அன்று 3 ஆண்டுகளுக்கு திருத்தியமைக்கப்பட்டது.

## 23. தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் பொருளாதார நிலையினை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் செயல்பட்டு வருகிறது. இக்கழகம் கம்பெனிகள்



சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டு 1982 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது.

இந்நிறுவனம் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இனத்தைச் சார்ந்த தனிநபர் மற்றும் குழுக்களுக்கு குறைந்த வட்டியில் சாத்தியக்கூறு உள்ள தொழில் மற்றும் வியாபாரம் சார்ந்த திட்டங்களுக்கு நிதியுதவி வழங்குகிறது.

இந்நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ.3,000 இலட்சம். இதன் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ.1,227 இலட்சம் ஆகும். இந்நிறுவனம் தேசிய பிற்படுத்தப்பட்டோர் நிதி மற்றும் வளர்ச்சி கழகத்தின் மாநில முகமையாக செயல்பட்டு வருகிறது. இக்கழகம் செயற்படுத்தும் பல்வேறு கடன் திட்டங்களுக்கான நிதியை, தேசிய பிற்படுத்தப்பட்டோர் நிதி மற்றும் வளர்ச்சி கழகத்திடமிருந்து, தமிழ்நாடு அரசின் பொறுப்புறுதியின் மீது கடனாகப் பெறுகிறது.

இக்கழகத்தின் தலைவராக திரு.கே.காஜா முகைதீன் அவர்கள் நியமனம் செய்யப்பட்டு 27.01.2022 அன்று பதவியேற்றுள்ளார்.

### 23.1 கடன் திட்டங்கள்

தனி நபர்கள் மற்றும் சுய உதவிக் குழுக்களுக்கு இக்கழகம் கடனுதவி வழங்கி வருகிறது. கடன் திட்டங்களுக்கான பயனாளிகளை, அந்தந்த மாவட்ட கூட்டுறவு சங்கங்களுக்கான இணைப்பதிவாளர், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர், மாவட்ட தொழில் மையத்தின் பொது மேலாளர் மற்றும் அந்தந்த மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் மேலாண்மை இயக்குநர் ஆகியோரைக் கொண்ட குழு தெரிவு செய்கிறது. கடன் திட்டங்களுக்கான அனுமதி மற்றும் நிதி, கூட்டுறவு வங்கிகள்/ கூட்டுறவு சங்கங்கள் மூலம் விடுவிக்கப்படுகிறது.



தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி /கூட்டுறவு நகர வங்கி/ தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம் பயனாளிகளுக்கு கடன் வழங்கி வருகிறது.

### 23.1.1. பொது காலக் கடன் திட்டம்

பொது காலக் கடன் திட்டத்தின் கீழ், குறைந்த வட்டி விகிதத்தில் சிறு வர்த்தகம் / வணிகம், விவசாயம் மற்றும் அதனை சார்ந்த தொழில்கள், கைவினை பொருட்கள் மற்றும் மரபுவழிச் சார்ந்த தொழில்கள் செய்வதற்கு கீழ்காணுமாறு கடன் உதவி வழங்கப்படுகிறது.

| வ. எண் | கடன் தொகை | வட்டி விகிதம் (ஆண்டொன்றுக்கு) | திரும்ப செலுத்தும் காலம் | ஆண்டு வருமானம் உச்சவரம்பு |
|---|---|---|---|---|
| 1 | ரூ.5 இலட்சம் வரையிலான கடன்களுக்கு | 6% | 3 முதல் 8 ஆண்டுகள் | ரூ.3 இலட்சம் |
| 2 | ரூ.5 இலட்சம் முதல் ரூ.10 | 7% | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | இலட்சம் வரையிலான கடன்களுக்கு | | | |
| 3 | ரூ.10 இலட்சம் முதல் ரூ.15 இலட்சம் வரையிலான கடன்களுக்கு | 8% | | |

இக்கடன் திட்டத்தில் பயனாளிகள் கடன்களை திரும்ப செலுத்தும் விகிதம் 91 விழுக்காடாக உள்ளது.

2021–2022 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் 401 பயனாளிகளுக்கு ரூ.508.58 இலட்சம் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

### 23.1.2. பெண்களுக்கான புதிய பொற்காலத் திட்டம்

பெண்களின் முன்னேற்றத்தினை நோக்கமாகக் கொண்டு இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் சிறு வணிகம் செய்வதற்கு கடன் வழங்கப்படுகிறது.



| கடன் தொகை | வட்டி விகிதம் (ஆண்டொன்றுக்கு) | திரும்ப செலுத்தும் காலம் | ஆண்டு வருமானம் உச்சவரம்பு |
|---|---|---|---|
| ரூ.2 இலட்சம் வரை | 5% | 3 முதல் 8 ஆண்டுகள் | ரூ.3 இலட்சம் |

இக்கடன் திட்டத்தில் பயனாளிகள் கடன்களை திரும்ப செலுத்தும் விகிதம் 92 விழுக்காடாக உள்ளது.

2021–2022 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் 408 பயனாளிகளுக்கு ரூ.231.77 இலட்சம் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

### 23.1.3. பெண்களுக்கான நுண் கடன் திட்டம்

பெண்களுக்கான நுண் கடன் திட்டத்தின் கீழ், மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்கள் தனியாகவோ அல்லது குழுவாகவோ சிறுதொழில் / வணிகம் செய்வதற்கு கடன் வழங்கப்படுகிறது. ஒரு குழுவில் அதிகபட்சம் 20 உறுப்பினர்கள் அனுமதிக்கப்படுவர்.

| கடன் தொகை | வட்டி விகிதம் (ஆண்டொன்றுக்கு) | திரும்ப செலுத்தும் காலம் | ஆண்டு வருமானம் உச்சவரம்பு |
|---|---|---|---|
| ஒரு நபருக்கு ரூ.1 இலட்சம் வரை; குழுவிற்கு ரூ.15 இலட்சம் வரை | 4% | 4 ஆண்டுகள் | ரூ.3 இலட்சம் |

இக்கடன் திட்டத்தில் பயனாளிகள் கடன்களை திரும்ப செலுத்தும் விகிதம் 95 விழுக்காடாக உள்ளது.

2021–2022 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் 11,557 பயனாளிகளுக்கு ரூ.7,473.14 இலட்சம் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

**23.1.4. ஆண்களுக்கான நுண் கடன் திட்டம்**

ஆண்களுக்கான நுண் கடன் திட்டத்தின் கீழ் ஆண்கள் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் தனியாகவோ அல்லது குழுவாகவோ சிறுதொழில் / வணிகம் செய்வதற்கு கடன் வழங்கப்படுகிறது. ஒரு



குழுவில் அதிகபட்சம் 20 உறுப்பினர்கள் அனுமதிக்கப்படுவர்.

| கடன் தொகை | வட்டி விகிதம் (ஆண்டொன்றுக்கு) | திரும்ப செலுத்தும் காலம் | ஆண்டு வருமானம் உச்சவரம்பு |
|---|---|---|---|
| ஒரு நபருக்கு ரூ.1 இலட்சம் வரை; குழுவிற்கு ரூ.15 இலட்சம் வரை | 5% | 4 ஆண்டுகள் | ரூ.3 இலட்சம் |

இக்கடன் திட்டத்தில் பயனாளிகள் கடன்களை திரும்ப செலுத்தும் விகிதம் 95 விழுக்காடாக உள்ளது.

2021–2022 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் 296 பயனாளிகளுக்கு ரூ.226.57 இலட்சம் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

2021–2022 ஆம் ஆண்டில் இக்கழகத்தால் மொத்தம் 12,662 பயனாளிகளுக்கு ரூ.8,440.06 இலட்சம் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

2022–2023 ஆம் ஆண்டிற்கு பல்வேறு திட்டங்களின் கீழ் ரூ.11,550 இலட்சம் (தேசிய பிற்படுத்தப்பட்டோர் நிதி மற்றும் வளர்ச்சி கழகத்தின் பங்குத் தொகை ரூ.11,000 இலட்சம் மற்றும் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டு கழகத்தின் பங்குத் தொகை ரூ.550 இலட்சம்) அளவில் கடன் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

### 23.2. சிறு, குறு விவசாயிகளுக்கான நீர்பாசன வசதி ஏற்படுத்த மானியத்துடன் கூடிய கடன் வழங்கும் திட்டம்

பொருளாதாரத்தில் பின்தங்கிய பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பினைச் சார்ந்த சிறு, குறு விவசாயிகளுக்கு நீர்பாசன வசதி ஏற்படுத்த மானியத்துடன் கூடிய கடன் வழங்கும் திட்டம் 2007–2008 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் தேர்வு செய்யப்படும் பயனாளிகளுக்கு கூட்டுறவு



வங்கிகள்/ தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் 50 விழுக்காடு மானியத்துடன் அதிகபட்சம் ரூ.1 இலட்சம் வரை கடன் வழங்கப்படுகிறது. இதுவரை 5,117 சிறு, குறு விவசாயிகளுக்கு மானியமாக ரூ.2,409.37 இலட்சம் விடுவிக்கப்பட்டுள்ளது.

2022–2023 ஆம் ஆண்டிற்கு சிறு, குறு விவசாயிகளுக்கு நீர்ப்பாசன வசதி ஏற்படுத்த மானியம் வழங்குவதற்கு ரூ.350 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 23.3 சீர்மரபின பழங்குடியினரின் பொருளாதார மேம்பாட்டிற்கான திட்டங்கள் (SEED)

ஒன்றிய அரசின் சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகம், கீழ்க்கண்ட நோக்கங்களுடன் சீர்மரபின பழங்குடியினரின்

பொருளாதார மேம்பாட்டிற்கான திட்டத்தினை சமீபத்தில் துவக்கியுள்ளது:

i) சீர்மரபின பழங்குடியினர் போட்டித் தேர்வுகளில் பங்கேற்பதற்கு அவர்களுக்கு நல்ல தரமான பயிற்சியினை வழங்குதல்

ii) சீர்மரபின பழங்குடியினர்களுக்கு ஆயுள் காப்பீடு திட்டங்களை அளித்தல்

iii) சீர்மரபின பழங்குடியினர்/நாடோடி பழங்குடியினர்/ பகுதி நாடோடி பழங்குடியினரின் சமூக நிறுவனங்களின் சிறிய குழுக்களை உருவாக்க மற்றும் வலுப்படுத்த சமூக அளவில் வாழ்வாதார முயற்சிகளை எளிதாக்குதல்.

iv) சீர்மரபின பழங்குடியின உறுப்பினர்களுக்கு வீடுகள் கட்ட நிதி உதவி வழங்குதல்

தமிழ்நாட்டில் வசிக்கும் சீர்மரபினர் சமூகத்தின் நலனிற்காக இப்பொருளாதார மேம்பாட்டிற்கான



திட்டத்தின் மேற்கண்ட கூறுகளை ஒப்பளிக்குமாறு இவ்வரசு ஒன்றிய அரசின் சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகத்திடம் கேட்டுக் கொண்டுள்ளது.

## முடிவுரை

மாநிலத்தின் மொத்த மக்கள் தொகையில் பெரும்பான்மையாக உள்ள பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பினரின் சமூக, கல்வி மற்றும் பொருளாதார நிலைகளை மேம்படுத்த இவ்வரசு உறுதிபூண்டுள்ளது. இப்பிரிவு மக்களின் மேம்பாட்டிற்காக பல்வேறு நலத்திட்டங்களைச் செயல்படுத்தி வருவதிலும், இடஒதுக்கீட்டுக் கொள்கையினை திறம்பட செயல்படுத்தி வருவதிலும் நமது மாநிலம் பிற மாநிலங்களுக்கு முன்னோடியாகத் திகழ்கிறது.

**ஆர்.எஸ். ராஜகண்ணப்பன்**
**பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர்**

# இணைப்பு

# 2022 – 2023 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீடு

**(ரூபாய் இலட்சத்தில்)**

| துறை | வருவாய் | மூலதனம் | கடன் | மொத்தம் |
|---|---|---|---|---|
| தலைமைச் செயலகம் | 727.13 | – | 0.01 | 727.14 |
| வக்ஃப் மற்றும் ஹஜ் குழு | 2120.47 | – | – | 2120.47 |
| பிற்படுத்தப்பட்டோர் நலன் | 53686.49 | 934.02 | – | 54620.51 |
| மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன் | 58072.56 | 2780.20 | – | 60852.76 |
| தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் | 121.45 | – | – | 121.45 |
| மாநில சிறுபான்மையினர் ஆணையம் | 73.29 | – | – | 73.29 |
| சிறுபான்மையினர் நலன் | 3129.19 | 1300.00 | – | 4429.19 |
| தமிழ்நாடு வக்ஃப் தீர்ப்பாயம் | 91.84 | – | – | 91.84 |
| **மொத்தம்** | **118022.42** | **5014.22** | **0.01** | **123036.65** |




மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 14.03.2022 அன்று விடுதிகள் மற்றும் கள்ளர் சீரமைப்புப் பள்ளி கட்டடங்களை திறந்து வைத்தார்



04.11.2021 அன்று செங்கல்பட்டு மாவட்டம், திருக்கழுக்குன்றம் வட்டம், பூஞ்சேரி கிராமத்தில் வசிக்கும் நரிக்குறவர் இன மக்களுக்கு நரிக்குறவர் நல வாரிய உறுப்பினர் அடையாள அட்டைகள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டன




மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் 14.04.2022 அன்று வன்னியர் சமுதாயத்திற்கு
10.5 விழுக்காடு சிறப்பு இட ஒதுக்கீடு தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது




மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 14.03.2022 அன்று விடுதிகள் மற்றும் கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள் ஆகியவற்றில் பணிபுரிந்து பணிக்காலத்தில் மறைந்த 15 பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகளை வழங்கினார்




மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 15.03.2022 அன்று திரு.க.திருநாவுக்கரசு அவர்களுக்கு
2021 ஆம் ஆண்டிற்கான சமூக நீதிக்கான தந்தை பெரியார் விருது வழங்கினார்கள்



துறையின் செயல்பாடுகள் குறித்து மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை
அமைச்சர் அவர்கள் தலைமையில் 08.04.2022
அன்று ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது